Registered at the G. P. O as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

Jegajothi
TOOTH POWDER
SEGAR & Co. MADURAI
ஜெகஜோதி பல்பொடி
சேகர் அன் கோ. மதுரை

போன்: 389 | National Tamil Daily | தேசிய தினசரி | தபாற் பெட்டி என் 49

மலர் 4 | யாழ்ப்பாணம் | பிலவ | மாசி 26 ஆம் நாள் | ஷவ்வால் 2 | (9-3-62) | வெள்ளிக்கிழமை | இதழ் 27

# காமராஜ் முதன்மந்திரி ஆனார்

சென்னை, மார்ச். 8

**திரு. காமராஜ மூன்ருவது தடவையாக சென்னை முதன்மந்திரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.**

**சென்னை சட்டசபையில் பெரும்பான்மைக் கட்சியான காங்கிரஸ் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பது கவர்னர் ஜெனரலுக்குத் தெரியப்படுத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து திரு. காமராஜரை கவர்னர் அழைத்திருந்தார்.**

திரு. காமராஜரின் பெயரை திரு பக்தவத்சலம் பிரேரித்தார். திரு. ஆர். சேதுபதி ஆமோதித்தார்.

வேறு யாருடைய பெயரும் பிரேரிக்கப்படாததால் திரு. காமராஜ் சென்னை சட்டசபை காங்கிரஸ் கட்சித் தலைவராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நேற்றுக்காலை 10-30மணிக்கு திரு. காமராஜ் கவர்னரைச் சந்தித்தபோது கவர்னர் திரு. காமராஜரை சென்னை முதன் மந்திரியாகத் தேர்ந்தெடுத்தார்.

திரு. காமராஜ் தன்னிடம் மீண்டும் நம்பிக்கை தெரிவிக்கப்பட்டதற்காக நன்றி தெரிவித்தார்.

### திரு. காமராஜ் டில்லி செல்கிருர்

டில்லியில் நாளை நடைபெறவிருக்கும் காங்கிரஸ் மத்திய பார்லிமெண்டரி போர்ட் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக திரு. காமராஜ் இன்று டில்லி செல்கிருர்.

மார்ச் 11-ம் திகதி தாம் சென்னை திரும்புவதாகவும் அதன்பின் புதிய மந்திரிசபை பதவியேற்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

## "ஜெனிவா மகாநாட்டுக்கு எப்போது வேண்டுமானலும் வரத் தயார்" —மாக்மில்லன்

லண்டன், மார்ச் 8

ஜெனிவா படைபலக் குறைப்பு மகாநாட்டுக்கு எந்தக் கட்டத்தில் வேண்டுமானலும், தாம் செல்வது உருப்படியான பலன் அளிக்குமென்ருல் தாம் அவ்வாறு மகாநாட்டுக்குச் செல்லத் தயாராக இருப்பதாக பிரிட்டிஷ் பிரதம மந்திரி திரு. மாக்மில்லன், ரஷ்யப் பிரதமர் குருஷ்சேவுக்கு சமீபத்தில் எழுதியுள்ள கடிதம் ஒன்றில் கூறியிருக்கிருர்.

ஜெனீவாவில் மார்ச் 12-ம் திகதி ரஷ்ய அயல்நாட்டு மந்திரி திரு. குரோமிகோவையும், அமெரிக்க மந்திரி திரு. ரஸ்கையும் சந்திக்கத் தயாராக இருக்கும்படி வெளிநாட்டு மந்திரி ஹோம்பிரபுவை கேட்டுக்கொண்டிருப்பதாகவும் திரு. மாக்மில்லன் கூறியிருக்கிருர்.

## கிருஷ்ணன் 'அர்ச்சுன'னுனர்

இந்தியாவிலே சென்ற ஆண்டு விளையாட்டு வீரராக, சென்னையைச் சேர்ந்த ஆர். கிருஷ்ணனை இந்திய அரசாங்கம் தெரிவு செய்து, அவருக்கு "அர்ச்சுனன்" என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்துள்ளது.

டென்னிஸ் பந்து ஆட்டத்தில் இந்தியாவின் புகழை என்றுமில்லாத உயர்த்தியதற்காக அவருக்குச் சமீபத்தில் 'பத்மஸ்ரீ' என்ற பட்டமும் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## அல்ஜீரியக் கைதிகள் தப்பி ஓடினர்

### சுரங்கப் பாதையால் சென்றனராம்

பாரிஸ், மார்ச் 8

அல்ஜீரியக் கைதிகள் பூமிக்கு அடியில் சுரங்கப்பாதை தோண்டி, இங்குள்ள ஒரு சிறையிலிருந்து தப்பியோடிவிட்டனர். அவர்களைப் பொலிசார் தேடி வருகின்றனர்.

## ரஷ்யா உடன்பட்டால் அணுகுண்டுசோதனை இல்லை

—திரு. கென்னடி அறிவிப்பு

வாஷிங்டன், மார்ச் 8

'அணுக்குண்டு பரிசோதனையால் மனித குலத்திற்கு ஆபத்தென்பதை உணர்கிறோம். ஆனல் மற்றவர்கள் இவ்வித ஆயுதங்களை தயார் செய்யும்போது எம்மைப்பாதுகாத்துக் கொள்ளக் கூடிய வகையில் நடந்துகொள்ளாவிடில் நிலைமை மோசமாகிவிடும்.'

இவ்வாறு அமெரிக்க ஜனதிபதி திரு. கென்னடி பத்திரிகை நிருபர்கள் கூட்டமொன்றில் தெரிவித்தார்.

ரஷ்யா உடன்பாட்டுக்கு வந்துவிட்டால் அடுத்த மாதம் நடக்கவிருக்கும் அணு ஆயுத சோதனையை நிறுத்திவிடலாம் எனத் திரு. கென்னடி மேலும் தெரிவித்தார்.

## டாக்டர் மு. வ. வின் 'அகல்விளக்கு'க்கு அகடமி பரிசு

புதுடில்லி, மார்ச். 8

டாக்டர் மு.வரதராசனுர்எழுதிய 'அகல்விளக்கு' சாகித்திய அகடமி பரிசுக்கென தேர்ந்தெடுக்கப்பட்டது.

பாரத மொழிகளில் எழுதப்பட்ட 13 புத்தகங்கள் 1960—61-ம் வருடத்துக்கான சாகித்திய அகடமி பரிசுகளுக்கென தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

மலையாளம் இந்தி மொழிகளில் எழுதப்பெற்ற எந்த நூல்களும் அகடமி பரிசுக்கெனத் தேர்ந்தெடுக்கப்படவில்லை.

## திரு. அருளம்பலம் காலமானர்

### யாழ்.ஐ. மா. வங்கித் தலைவர்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணத்திலிருந்து மாதந்தோறும் வெளிவரும் கூட்டுறவு வெளியீடான 'ஐக்கியதீபம்' இதழின் ஆசிரியரும் வழக்கறிஞருமான திரு. அ. அருளம்பலம் நீராவியடியிலுள்ள அவரது இல்லத்தில் நேற்றுப் பிற்பகல் காலமான செய்தியை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

யாழ்ப்பாணம் ஐக்கிய மாகாண வங்கித்தலைவராகவும், வட இலங்கைக் கூட்டுறவு மேற்பார்வைச் சபைக் காரியதரிசியாகவும் இறுதிவரை இருந்து கூட்டுறவுக்கு உழைத்த திரு. அருளம்பலம், ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று கூட்டுறவு சம்பந்தமாகப் படித்தும், ஜப்பானுக்கு மூன்று பேர்கொண்ட இலங்கைக் கூட்டுறவுப் பிரதிநிதிகள் கோஷ்டியின் தலைவராகவும் சென்றதோடு கூட்டுறவு நூல் ஒன்றினையும் வெளியிட்டிருக்கிருர்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதிகாரசபை, சைவபரிபாலனசபை ஆகியவற்றின் காரியதரிசியாகவிருந்து சைவத்திற்குச் சிறந்த பணியாற்றினர்.

யாழ்ப்பாணத்தில் கூட்டுறவுப் பாடசாலையை அமைத்தவர்களில் ஒருவரான அவர் அதன் அதிபராகவும் கடமையாற்றியிருக்கிருர்.

## ஐ.நா. தலையிடாமலிருந்தால் காங்கோ பிளவுபட்டிருக்கும்

### யு. எஸ். பிரதிநிதி ஸ்டீவன்ஸன் அறிவுறுத்தல்

நியூயார்க், மார்ச் 8

ஐ. நா. காங்கோவில் நடவடிக்கை எடுத்துக்கொண்டதால்தான், காங்கோ துண்டாடப்படவில்லை என்று ஐ. நா. வில் உள்ள யு. எஸ். நிரந்தரப் பிரதிநிதியான திரு. அட்லாய் ஸ்டீவன்ஸன் இங்கு கூறினர்.

திரு. அட்லாய் ஸ்டீவன்ஸன் மேலும் கூறியதாவது:-

காங்கோவில் ஐ. நா. நடவடிக்கை எடுக்காமலிருந்தால், தென் ஆபிரிக்க பிரதேசங்களின் வெள்ளையர்களுடனும் சில ஐரோப்பியர்களுடனும் காடாங்கா சேர்ந்திருக்கும். லியபோல்ட்டுவில், ஸ்டான்லிவில் முதலியவற்றின் ஆபிரிக்க தேசிய வாதிகள் ஆபிரிக்காவின் மற்ற கறுப்பர்களுடனும் சோவியத் கோஷ்டியுடனும் சேர்ந்திருப்பார்கள். காங்கோவின் ஐக்கியத்தையும் சமாதானத்தையும் ஸ்திர தன்மையையும் பாதுகாப்பதற்கு ஐ. நா. நீண்டகாலமாகப் பொறுமையுடன் முயற்சி எடுத்துவந்திருக்கிறது. ஐ.நா. வின் தலைமை பூரண நடுநிலைமையுடன் இந்த முயற்சியை எடுத்துவந்திருக்கிறது. இந்த முயற்சிக்கு நல்ல பலன் ஏற்பட்டுள்ளது. ஆபிரிக்காவில் ஐ. நா. காட்டும் [redacted] கலாசாலையில் நடைபெற்ற ஒரு மகாநாட்டில் பேசுகையிலேயே திரு. அட்லாய் ஸ்டீவன்சன் இவ்வாறு கூறினர்.

## புகை பிடித்ததால் சென்ற ஆண்டில் 20ஆயிரம் பேர் பலி

லண்டன், மார்ச் 8

சென்ற ஆண்டில் பிரிட்டனில் 20,000 பேருக்குமேல் சுவாசப்பை புற்றுநோய்கண்டு இறந்தனர். அவ்வளவு பேருக்குமேல் சுவாசப்பை புற்றுநோய் கண்டு இறந்தனர். அவர்கள் எண்ணிக்கை இன்னமும் பெருகிக்கொண்டிருக்கிறது.

பெண்களிடையிலும் இந் நோய் அதிகரித்துக்கொண்டிருக்கிறது. இவர்களில் இறந்தவர், தொகை 3000ஐ எட்டிக் கொண்டிருக்கிறது.

அரசினர் வைத்தியக்கல்லூரித் தலைவர் சேர் ரபார்ட் பிளாட் இத் தகவல்களை நிருபர்கள் கூட்டத்தில் வெளியிட்டார். "புகைபிடிப்பதும், உடல் நலமும்" பற்றிய கல்லூரியின் அறிக்கையை வெளியிடுவதற்காக நிருபர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

"சிகரெட் பிடியபவர்களுக்குத்தான் சுவாசப்பை புற்றுநோய் வருகிறது. ஆண்களிடையில் பொதுவாகக் காணப்படும் நோய் இது" என்று சேர் பிளாட் கூறினர்

நிறைய சிகரெட் பிடிப்பவர்களிடையில் மற்ற வியாதிகளினல் இறப்பவர்கள் தொகையும் மிதகமாக இருக்கிறதென்று சேர் பிளாட் சொன்னர். சுபவாதம், மூளை ரத்தக்கொதிப்பு வியாதிகளால் அதிகமாக இறந்தனர்.

'இவ்வியாதிகள் சிகரெட் பிடிப்பதால் வருவதாகக்கூறுவதை மறுத்து ஒவ்வொரு விதத்திலும் எதிர்ப்பு கிளபபப்படுகிறது ஆனல், எந்த எதிர்ப்புச் சித்தாந்தங்களும் நிலைக்காது. அதேசமயம் ஒவ்வொரு அம்சமும் சிகரெட்டுகளுக்கு எதிரான சாட்சியத்தையே ஊர்ஜிதம் செய்யக் காணலாம். என்றும் பிளாட் கூறினர்.

## முகமதுநபிகள் (ஸல்) பற்றிய சினிமா தடுப்பதற்கு

### பாக். அரசாங்கம் முயற்சி

கராச்சி, மார்ச் 8

வெளிநாட்டு சினிமா கம்பெனியொன்று முகமது நபிகள் (ஸல்) வாழ்க்கைபற்றி சினிமாப்படம் எடுகக உத்தேசித்திருக்கிறது. இந்த முயற்சியைக் கைவிடும்படி அவர்களை வற்புறுத்த பாக் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

முஸ்லிம்களுக்கு மிகவும் புனிதமான முகமதுநபிகள் வாழ்க்கையை வர்த்தகரீதியில் பயன்படுத்திக்கொள்வதை பாக். அரசாங்கம் விரும்பவில்லையென்று செய்தி இலாகா மந்திரி இன்று நிருபர்களிடம் கூறினர்.

# அரைச்சதத்திற்கு 50 ரூபா அபராதம்!

## மார்ச் 19ல் மேலும் 11 வழக்குகள் விசாரணை செய்யப்படும்

யாழ்ப்பாணம், வியாழன் உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டத்தை மீறியதாகக் குற்றஞ் சாட்டி, உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரிகளால் தொடரப்பட்ட வழக்குகளில் 11 வழக்குகள் சென்ற புதன் கிழமை யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் லெப்டினன்ட் ஐவன் சமரவிக்கிரமா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டன.

யாழ்ப்பாணம் நாவலர் வீதியைச் சேர்ந்த தனிப்பட்ட வியாபாரியொருவர் கடையில் விலைப்பட்டியலை பகிரங்கமாக வைக்கத் தவறியதாகவும் நிறை குறைந்த பாணை விற்பனை செய்ததாகவும் குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கில் எதிரிக்கு ரூபா 50 அபராதம் விதிக்கப்பட்டது.

விலைப் பட்டியலைத் தொங்கவிடத் தவறியதற்காக புங்குடுதீவிலுள்ள ஒருவருக்கு ரூபா 50 அபராதம் செலுத்துமாறு உத்தரவிடப்பட்டது.

நாயன்மார்கட்டில் 59 சதத்துக்கு விற்கவேண்டிய கோதுமைமாவை 60 சதத்திற்கு விற்று ரூத்தலுக்கு அரைச்சதம் கூடுதலாக விற்பனை செய்த ஒரு கடைக்காரருக்கு ரூபா 25 தண்டம் கொடுக்குமாறு தீர்ப்பளிக்கப்பட்டது.

பங்கீட்டு அரிசிப் புத்தகங்களுக்கான பதிவுப் புத்தகத்தை சரியான முறையில் வைத்திருக்கத் தவறிய குற்றத்திற்கு தாவடியைச் சேர்ந்த கூட்டுவு பண்டகசாலை மனேஜர் ஒருவருக்கு ரூபா 25 அபராதம் விதிக்கப்பட்டது.

யாழ்ப்பாண நகரின் பாண் போறணை ஒன்றில் விலைப்பட்டியல் தொங்கவிடத் தவறியதற்காக ரூபா 50 அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இதே குற்றச் சாட்டுகளின் கீழ் தொடரப்பட்ட மேலும் 11 வழக்குகள் இம்மாதம் 19-ம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## ஆங்கில கட்டுரை போட்டி

### பிரி. தகவல் பகுதியும் கல்வி பகுதியும் நடத்தும்

பேராதனை, வியாழன் பிரிட்டிஷ் தகவல் பகுதி, கல்வி இலாகாவுடன் இணைந்து ஆங்கிலக் கட்டுரைப் போட்டியொன்றை நடாத்தவிருக்கிறது. இந்தக் கட்டுரை போட்டி எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறும்.

மத்திய மகாவித்தியாலயம், மகாவித்தியாலயம்கல்விடைரக்டர் நிர்வாகத்தின் கீள் உள்ள பாடசாலைகள் ஆகியவைகளில் பயிலும் ஜி. ஸி. ஈ., எச். எஸ். ஸி. மாணவர்கள் இந்தக் கட்டுரைப் போட்டியில் பங்குபற்றலாம்.

ஆங்கிலத்தில் மாணவர்கள் நல்ல ஊக்கம் செலுத்தும் முகமாகவே இக்கட்டுரைப் போட்டி நடைபெறுகிறது.

பரிசு பெற்ற முதல் ஆறு பேருக்கு பிரிட்டிஷ் தகவல பகுதி விலை உயர்ந்த புத்தகங்களை வழங்கும்

## அருணோதயம் வெற்றிபெற்றது

வேலணை, புதன் வேலணை அரசினர் மத்திய கல்லூரி விளையாட்டுக் கோஷ்டிக்கும், புங்குடுதீவு அருணோதயம் விளையாட்டுக்சழக வீரர்களுக்குமிடையே கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கைப்பந்தாட்டப் போட்டியில் புங்குடுதீவு அருணோதய வீரர்கள் அடுத்து இரு ஆட்டங்களிலும் வைற்றிபெற்றனர்.

## உங்கள் தினப்பலன்

சோதிடஆசான் செ. தெல்லியூர்

பிலவ ஆண்டு மாசிமாதம் 26-ந் திகதி வெள்ளிக்கிழமை (9-3-62) பகல் 9-48 வரை திருதியை. பகல் 8-15 வரை ரேவதி. பின் அச்சுவினி. அமிர்தசித்தயோகம். முகூர்த்த நாள். சுபகருமங்களெல்லாம் ஆற்றலாம். புதிய வர்த்தகத்திற்கும் நன்மையான தினம்.

### இன்றுபிறந்தவர்களுக்கு

இவர்களுக்கு இவ்வாண்டில் நற்பலன்கள் நடக்கும். காணி மனைவாங்கவும் கால்நடைகள் சேர்க்கவும் வாகனங்கள் கொள்ளவும் இடமுண்டு. இடையிடை நட்டத்திற்கும் பெரும் அழிவுக்கும் இடமுண்டாகையால் நிதானம் வேண்டும். பெண்களுக்கு விவாகச் சிறப்பு, கலைச் சிறப்பு,பொருள் சேர்க்கையும் மாணவருக்கு வித்தியாபிவிருத்தியும் காணப்படுகின்றன. தீப்பலன் குறைவாக இருப்பினும் தெய்வவழிபாடு உத்தமமாகும்.

### நட்சத்திரப்பலன்

அச்சுவினி: பெண்தொல்லை, குடும்பச்சச்சரவு.

பரணி: தொழில் நன்மை, பணவரவு.

கார்த்திகை: குடும்ப சந்தோஷம், நிம்மதி.

ரோகிணி: குடும்பச்சச்சரவு, கஷ்டம்.

மிருகசீரிடம்: வித்தை மேன்மை, மதிப்பு.

திருவாதிரை: மனமடிவு, கஷ்டம்.

புனர்பூசம்: குடும்பசுகம், பணவரவு.

பூசம்: செலவு, பண்க் கஷ்டத்தால், கடன்படல்.

ஆயிலியம்: பிரயாணசுகம், நன்மை.

மகம்: பணமுடை, கவலை.

பூரம்: வாக்குவெற்றி, தொழில் வெற்றி.

உத்தரம்: முதியோர் உதவி, குடும்பசுகம்.

அத்தம்: தெய்வ வழிபாடு, தருமச் செலவு.

சித்திரை: நல்லோர் நட்பு, தொழில் வெற்றி.

சுவாதி: பிரயாணக்கஷ்டம், ஏமாற்றம்.

விசாகம்: பிதுருவழி உதவி, குடும்பசுகம்.

அனுஷம்: வீண் அலைச்சல் பணசெலவு.

கேட்டை: தொழில் வெற்றி, பணவரவு.

மூலம்: கடன்தொல்லை, நிம்மதியழிவு.

பூராடம்: தெய்வ உதவி, கடும் உழைப்பு பலன்.

உத்தராடம்: இனஉதவி, பணவரவு.

திருவோணம்: பெரியோர் பகை, கவலை.

அவிட்டம்: நல்லோர் நட்பு, பகைநீக்கம்.

சதயம்: அற்பர் தொல்லை, கஷ்டம்.

பூரட்டாதி:வித்தைமேன்மை, வாக்கு வெற்றி,

உத்தரட்டாதி: செய்காரிய தடை, நலக்குறைவு.

ரேவதி: குடும்பசுகம், பணமுடை நீங்கல்.

## ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டது

கொழும்பு, புதன் இலங்கை அரசாங்கம் அமெரிக்க குரல்' (வாய்ய் ஒப் அமெரிக்கா) உடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தைமேலும் 10 வருடஙகளுக்கு புதுப்பித்துள்ளது.

# குடும்பத்தினரும் நண்பர்களும் மட்டும் வழியனுப்பினர்

## சர் ஒலிவர் பிரயாண விபரம்

கொழும்பு, வியாழன் இலங்கையின் முன்னைநாள் கவர்னர் ஜெனரல் சர் ஒலிவர் குணத்திலகா நேற்று மாலை, இந்திய எயர் லைன்ஸ் விமான மூலம் பம்பாய் பிரயாணமானர். அங்கிருந்து அவை லண்டன் செல்கிருர். சர் ஒலிவரை வழியனுப்ப இரத்மலானை விமானநிலையத்தில் அவரது குடும்பத்தினரும் சில வெளிநாட்டு தூதுவர்களும் நண்பர்கள் சிலரும் வந்திருந்தனர்.

வெளிநாட்டுத் தூதுவர்களில், இலங்கையிலுள்ள கனடா ஹைகமிஷனர் திரு. ஜேம்ஸ் ஜோர்ஜ், ஜேர்மன் அரசியல் தூதர், டாக்டர் தியோடோர் எம். ஓர், இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் ஹைகமிஷனர், சர் அலெக்ஸாண்டர் மொர்லி ஆகியோரும் கவர்னர்ஜெனரலின் காரியதரிசி திரு. என். டபிள்யு அட்டுகோரளை, சர் ஒலிவரின் குடும்பத்தினரும் விமானநிலையத்தில் வந்திருந்தனர். அரசாங்க அங்கத்தவர்கள் எவரும் வரவில்லை.

கடந்த 8 வருட காலமாக இலங்கையின் கவர்னர்ஜெனரலாக பதவி வகித்த சர் ஒலிவர் குணத்திலகா, கடந்த மார்ச் மாதம் முதல் திகதி முதல் ராணி மாளிகையை விட்டு அவரது மகளான திருமதி ஷீலாசதானந்தனுடன் இருந்து வந்தார்.

நேற்று பிற்பகல் பொலிஸ் பாதுகாப்புடன் சர் ஒலிவர் குணத்திலகா இரத்மலானை விமானநிலயத்தை அடைந்தார். இவர் சென்ற காரில் சதானந்தன் தம்பதிகளும், மற்ற மகளான திருமதி மலோறி விஜயசிங்காவும் பிரயாணம் செய்தனர்.

புதுடில்லி, மார்ச் 8 பொதுத்தேர்தல்களில் காங்கிரஸ் வெற்றி பெற்றதற்காக பிரதம மந்திரி நேருவைப் பாராட்டி நேபாள மன்னர் மகேந்திரா ஒரு செய்தியை அனுப்பியுள்ளார்.

பிரதம மந்திரி பதில் அனுப்பி விட்டதாகத் தெரிகிறது.


புதுவருட கொண்டாட்டத்திற்கு தேவையான பிடவைகளுக்கு முந்துங்கள்!

விசேஷ விலைகள்!

பிறின்ரெட் வொயில் சேலைகள்
எல்லா டிசைன்களிலும் 6 யார்
ரூ. 10-50 — ரூ.16-50 வரை

பிறின்ரெட் பெதற்ஜ் நைலோன்
புதிய டிசைன்கள்
ரூ. 37-50

கடாவ் வொயில் சேலைகள்
பிறின்ற் போட்டவைகளும் வெள்ளையும் போடர் போட்டவை 6 யார் ரூ. 16

காஞ்சிபுரப் சேலைகள்
புதிய தெரிவுகள்
ரூ. 35 தொடக்கம்

டெக்கா சேலைகள்
நூறு கலர்களில் ரூ. 15
தொடக்கம் ரூ. 30 வரை

ரேபியா வொயில்
36" அகலம்
ரூ. 7-50 தொடக்கம்

லேஸ் மைைப்புரி சேலைகள்
புதிய டிசைன்கள் ரூ.72-50

கடாவ் பிளேன் வொயில்
30 கலர்கள் 6 யார்
ரூ. 13-50

பெதர் நைலோன் சேலைகள்
திறமையான 75 கலர்களில்
ரூ. 40-50

டைகர் வொயில் வெள்ளை
வெள்ளை 48" அகலம் 6 யார்
ரூ. 16-50

கிளேஸ் கொட்டன்
இங்கிலீஸ் கலர் 36"
ரூ. 4-50 ஒரு யார்

ஜெஸிலின்
இங்கிலீஸ் லினன்
வெள்ளையும் மற்றும் கலர்களிலும்
ரூ. 3-75 ஒரு யார்

சிலிப்பர் சற்றின்
36" அகலம் ரூ. 2-75 ச.

பான்ஸி வொயில்
36" அகலம் ரூ. 4-50ஒருயார்

[redacted]

பிறின்ரெட் இங்கிலீஸ் கிளேஸ் கொட்டன்
36" அகலம் ரூ.3-50 ஒரு யார்

டயரும்ஸ்
மெயின் வீதி, யழ்ப்பாணம்


# எருமை மாட்டை களவெடுத்ததாக வழக்கு

## ஒரு நபருக்கு சிறைவாசம்; மற்றவருக்கு நன்னடத்தை

சாவகச்சேரி, வியாழன் இராமநாதபுரத்தைச்சேர்ந்த யோசேப் கபிரியல் பிள்ளைக்குச் சொந்தமான 110 ரூபா பெறுமதியான எருமைமாட்டைக் களவாடியதாகவும், களவுப் பொருளை வைத்திருந்ததாகவும் கிளிநொச்சிப் பொலிசாரால் வட்டக்கச்சேரி வாசிகளான சுப்பையா சுப்பிரமணியம், கணபதி கந்தசாமி ஆகிய இருவர் மீதும் குற்றம் சாட்டித் தொடர்ந்த வழக்கு விசாரணையில் இருவரும் குற்றவாளிகளாகக் காணப்பட்டனர்.

முதலாம் எதிரியான சுப்பையா சுப்பிரமணியம் இதற்கு முன்னரும் இருமுறை குற்றவாளியாகக் காணப்பட்டமையால் கையடையாளம் எடுத்தபின் சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் திரு. ஏ. வைத்திலிங்கம் அவருக்கு மூன்று மாதக் கடூழிய சிறைத்தண்டனை விதித்து, இரண்டாம் எதிரி இதற்கு முன் குற்றம் செய்யாதபடியாலும் இளைஞராய் இருப்பதாலும் 250 ரூபா பிணையில் இரண்டுமாத நனநடத்தையிலிருக்கும் படியும் தீர்ப்பளித்தார்.

## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணநந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி யாழ்ப்பாணம்

## மரண அறிவித்தல்

யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் பரிசாரகராக வேலை செய்யும் கே. தியாகராஜா என்பவரின் மகள் காலமாகிவிட்டார். அன்னரின் பூதவுடல் 8-3-62 பிற்பகல் 2 மணியளவில் செம்மணி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இங்ஙனம்,
மரண சகாய நிதிக்குழு.

## 36 தடவை இறந்தார்!

மெல்போன், மார்ச் 8 மெல்போன் அல்பிறட் ஆஸ்பத்திரியில் நடை பெற்ற ஒரு சிக்கலான இருதய ரணசிகிச்சையின்பேது, ஒருவர் 36 தடவைகள் இறந்தார்! இதுபற்றி நேற்று டாக்டர்கள் தெரிவிக்கையில் இருதயரணசிகிச்சைக்குள்ளான திரு. ஏனஸ்ட் ஜக்கோப்ஸனின் (வயது 87) நிலைமை திருந்தியிருக்கிறது என்று கூறினர்.

# அல்ஜீரியாவில் 13 பேர் மாண்டனர்

## 17 பேருக்கு காயம்

பாரிஸ், மார்ச் 8

அல்ஜீரிய—பிரெஞ்சுப் பிரதிநிதிகள் நேற்று இரண்டு தடவைகள் சந்தித்து பேசினர். பேச்சுவார்த்தைகள் மூன்று கட்டங்களாக நடைபெறும் எனத் தெரிகிறது. பிரதிநிதிகள் அனைவரும் தனியாகச் சந்தித்துப் பேசுவார்கள். இரு தரப்பு மந்திரிகள் தனியாகச் சந்திப்பார்கள். நிபுணர்கள் தனியாகச் சந்திப்பார்கள்.

இதற்கிடையில் நேற்று அல்ஜீரியாவிலும், ஓரானிலும் ஓ. ஏ. எஸ். பயங்கரவாதிகளின் தாக்குதல் காரணமாக 13 பேர் கொல்லப்பட்டனர்; 13 பேர் காயமடைந்தனர்.

## அமெரிக்க சூரிய ராக்கெட்

கேப்கனவரோல் மார்ச் 8

3 கட்டடெல்டா ராக்கெட் ஒன்றைஅமெரிக்காநேற்றுஅனுப்பியது. பூமிக்குமேல்350மைல் உயரத்தில் சுற்றி வரும் இது, சூரியன் சம்பந்தமான தகவல்களை அனுப்பிக்கொண்டிருக்கும். 45 லட்சம் டாலர் செலவில் உருவாகிய குறித்த ராக்கெட்மணிக்கு 17,000 மைல் வேகத்தில் சுற்றி வருகிறது.

# 'பர்மாபுரட்சி: இந்தியா பாடம் கற்கவேண்டும்'

-ராஜாஜி

சென்னை, மார்ச் 8

பர்மாவில் ஜெனரல் நேவின் நடத்திய இரத்தம் சிந்தாப் புரட்சி பற்றி ராஜாஜி குறிப்பிடுகையில், ரங்கூனில இப்பொழுது ஜனநாயகம் முடிந்துவிட்டதாகக் கூறினர்.

இதிலிருந்து இந்தியாபாடம் கற்க வேண்டும் என்று அவர் எச்சரித்தார். நிரந்தர சைன்யத்தின் பலத்தை சமன்படுத்த நல்ல பிரஜைகள் சேனையைக் கட்டி வளர்க்க வேண்டும் என்றார் அவர்.

பிராந்திய சேனையைக் கட்டி வளர்ப்பதில் இந்தியா பெரும் கவனம் செலுத்த வேண்டும். சைன்யத்தின் வெறும் வாலாக மட்டும் அது இருக்கக்கூடாது. சுயமாகச் செயல்படும் வகையில் அது நன்ருக இருக்க வேண்டும்.

பலத்தை இவ்வாறு சமனப்படுத்துவதுமட்டுமின்றி, எதிர்ப்பு சக்தியை மக்கள் வளர்க்க வேண்டும். மக்கள் விரும்பாவிடில், ராணுவத்துக்கு உணவும் சாதனங்களும் அளிக்க மறுத்தால் சைன்யம் முழுவதும் தன்பக்கமுள்ள போதிலும் எந்த ஜெனரலும் சில வாரங்களுக்குமேல் அதிகாரம் வகிக்க முடியாது என்றும் அவர் கூறினர்.

# கேரள முதன் மந்திரி தாக்கப்பட்ட சம்பவம்

## பொலிசாருக்கு சம்பந்தம் இருக்கிறதாம்

திருவனந்தபுரம், மார்ச் 8

திருச்சூரில் ஞாயியன்று முதல் மந்திரி ஸ்ரீ தாணுப் பிள்ளைமீது நடந்த கல்வீச்சு சம்பவத்தில் பொலிஸாருக்கு சம்பந்தமிருக்கலாம் என்று தாம் சந்தேகிப்பதாக கேரள அசெம்பிளியில் பி. சோ. கட்சி மெம்பர் ஸ்ரீ பி. ஆர். குருப் கூறினர்.

ஸ்ரீ குருப் மேலும் சொன்னதாவது:-

பொலிஸ் மந்திரி ஸ்ரீ சாக்கோ சம்பவம் பற்றி நேற்று அசெம்பிளியில் வெளியிட்ட அறிக்கையும், மலைநாடு கிருஷிக சங்கத்தை ஆதரிக்கும் ஒரு பத்திரிகை, சம்பவம் பற்றி வெளியிட்ட விவரங்களும் அநேகமாக ஒன்ருக இருக்கின்றன. ஸ்ரீ சாக்கோ வெளியிட்ட அறிக்கை, திருச்சூர் பொலிஸாரிடமிருந்து வந்த தகவலை அடிப்படையாகக் கொண்டது என்று நம்புகிறேன். சீனியர் பொலிஸ் அதிகாரிகள் முன்னிலையில் முதல் மந்திரி தாக்கப்பட்டார் என்பதையும் இந்த அறிக்கைகளையும் சேர்த்துப்பார்த்தால், "பொலிஸாருக்குத் தெரிந்துதான் விஷயம் நடந்திருக்கிறது" என்ற சந்தேகமே ஏற்படுகிறது.

அரசாங்கம் இவ்விஷயங்கள் யாவற்றையும் ஆலோசனைக்கு எடுத்துக் கொண்டு, சம்பவம் பற்றி பூராவாகப் புலன் விசாரணை நடத்த வேண்டும.

ஆர்ப்பாட்டக்காரர்களின் பின்னுலிருந்து கல் வந்தது என்று ஸ்ரீ சாக்கோ சொன்னர். ஆர்ப்பாட்டக்காரர்களுக்குப் பின்பக்கத்திலிருந்து யாரோ கற்களை வீசினர் என்று அப்பத்திரிகைச் செய்தியும் கூறுகிறது என்று ஸ்ரீ குருப் கூறினர்.

ஸ்ரீ சாக்கோ உடனே குறுக்கிட்டு தாம் சொன்னதை மெம்பர் சரியாக எடுத்துச் சொல்லவில்லை என்று கூறினர். மலைநாடு கிருஷிக சங்கத்தினல் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில்கலந்துகொண்டவர்கள் ரஸ்தாவுக்கு ஓடி, கறுப்புக் கொடிகளை ஆட்டினர்கள் என்றும், கற்களை வீசினர்கள் என்றும் தாம் சொன்னதாக ஸ்ரீ சாக்கோ விளக்கினர்.

கேரள முதன் மந்திரிமீது கல் வீசப்பட்ட சம்பவம் குறித்து கேரள ராஜ்ய பி சோ. கட்சிப் பொதுக் காரியதரிசி ஸ்ரீ ஏ. ஸ்ரீதரன் அறிக்கையொன்றை விடுத்திருக்கிருர். கல் வீச்சு முன்னதாகவே திட்டமிடப்பட்டது; கல் வீசியவர்களை மட்டும் தேடுவதில் பயனில்லை. ஆனல் இதனை முன்கூட்டியே திட்டமிட்டவர்களையும் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் தமது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிருர்.

## கிரிக்கெட்

கிங்ஸ்டன், மார்ச் 8

இங்கு மேற்கிந்தியத் தீவுக்கும் இந்தியாவுக்குமிடையே நடைபெற்று வரும் 2-வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் இந்தியா 7 விக்கட் நஷ்டத்திற்கு 280 ரன்கள் எடுத்தது.

## காஷ்மீர்: நேரடி பேச்சுக்கு வழிகாண முயற்சி?

கராச்சி, மார்ச் 7

காஷ்மீர் பற்றி இந்தியாவும், பாகிஸ்தானும் அதிபர்கள் கூட்டத்தில் அல்லாத, பரஸ்பர பேச்சுவார்த்தைகள் நடத்தும் சாத்தியக்கூறு உண்டா என்பதைக் கண்டறிவதில் தற்போது ஈடுபட்டுள்ளன என்று ஆதார பூர்வமான வட்டாரத்திலிருந்து தெரிகிறது.

அயூப்கானை இந்தியா வருமாறு நேருஜி விடுத்த அழைப்பை கராச்சியிலுள்ள இந்திய ஹைகமிஷனர் ஸ்ரீ ராஜேசுவரதயாள் புதுப்பித்ததும், இரண்டு தினங்கள் கழித்து அவர் பாக். வெளி விவகார மந்திரி மன்சூர் காதரை சந்தித்ததும் இந்த வகையில் செய்யப்படும் முயற்சியே என்றும் தெரிகிறது.

அவர் மீண்டும் ஒரு வார காலத்தில் பாக். வெளி விவகார மந்திரியைச் சந்திக்கக் கூடும். மந்திரிகள் கூட்டத்திலோ அல்லது அதிகாரிகள் கூட்டத்திலோ மீண்டும் பேச்சுவார்த்தை நடத்துவது பற்றி பாகிஸ்தானின் நிலை என்ன என்பது அப்போது தெரியக் கூடும்.

அயூப்கானுக்கு விடுத்துள்ள அழைப்பைப் புதுப்பித்திருப்பது, கவனத்தைத் திருப்பும் தந்திரம் என்றும், இந்தப் பிரச்சினையை ஐ. நா. வில் கிளப்பவொட்டாமல் தடுப்பதற்கான தந்திரம் என்றும் பாக். பத்திரிகைகளில் சொல்லப்படும் கருத்தை, வஷயமறிந்த வட்டாரங்கள் மறுக்கின்றன.

காஷ்மீர் குறித்து ஐ. நா. வில் பல தடவை விவாதம் நடந்திருப்பதால், அது குறித்து இந்தியா புதிதாகப் பயப்படுவதற்கு முகாந்திரமில்லை என்று சுட்டிக் காட்டப்படுகிறது. பரிகாரத்தை மேலும் தாமதப்படுத்தும் இந்தியா-பாக். உறவை மேலும் கெடுக்கும் என்பதைத் தவிர பயப்படுவதற்கு இதில் எதுவுமில்லை என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

## பர்மாவில் பத்திரிகை தணிக்கை இல்லை

ரங்கூன், மார்ச் 8

பர்மாவில் பத்திரிகைத் தணிக்கை இருக்காது என அறிவிக்கப்படுகிறது. ஆனல் புரட்சி சபைநியமித்துள்ள ஐவர் கொண்ட சபையுடன் பத்திரிகைகள் ஆலோசனை நடத்த வேண்டும். பர்மிய புரட்சி அரசாங்கத்துக்கு சீனு அங்கீகாரம் அளித்துள்ளது.

## நாவலரும் சிவராத்திரியும்

தெல்லிப்பழை, வியாழன்

"சைவசமயக் கட்டுப்பாடுகள் மூட நம்பிக்கைகள் என்ற எண்ணமே இன்றைய சைவ சமய வளர்ச்சித்தளர்வுக்குரிய காரணமாகும். சைவசமயத்திற்கென கடுமையான கட்டுப்பாடுகள் [illegible] எதுவுமில்லை. ஆனல் இயற்கையாக அமைந்த நெறிகளே சமயத்தை வளம்படுத்துகின்றன".

ஈழநாட்டு வேதாகம சைவ சித்தாந்த சபைக்காரியதரிசி திரு. ஆ. வே. அருளம்பலம் மாவிட்டபுரம் சின்னப்பு மடத்தில் நடந்த ஞாயிற்றுக் கிழமையிரவு நிகழ்ந்த சிவராத்திரி விழாவைபவத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர். அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: ஆறுமுகநாவலர் எவ்வளவு திண்மையுடன் தளர்ச்சியடைந்துபோன நிலையிலிருந்து சைவத்திற்குப் புத்துணர்வூட்டினர் என்பதனை நாம் உணரவேண்டும். தமிழகத்தில் யாழ்ப்பாணத் தலைவர்களுக்குப் பெருமை தேடித் தந்தவர் நாவலரே. வேத சிவாகமங்களைப் பதி வாக்கெனவேகொண்டவர் நாவலர்.

சைவம் என்றும் அழிந்து போகாமல் நிலைத்து நிற்கக் கூடியது. விதாண்டா வாதங்களினல் சமயம் சிலவேளை தளர்ச்சிபெறலாம். அங்ஙனம் தளர்ச்சியுற்ருலும் இறைவன் அருளால் அவதார புருஷர்கள் தோன்றுவர்.

வேதாகம பூஷணம் பிரமஸ்ரீ கு. பாலசுந்தரக்குருக்களும் பேசினர்.

# பல ராஜ்யங்களில் காங்கிரஸ் தலைவர்கள் தெரிவு

புதுடில்லி, மார்ச் 8

பல ராஜ்யங்களில் சட்டசபை காங்கிரஸ் கட்சிக்குத் தலைவர்கள் தெரிவு செய்யப்பட்டுவிட்டனர். பீகார், மத்தியபிரதேசம், தமிழ்நாடு, அஸ்ஸாம், பஞ்சாப் ஆகிய ராஜயங்களில் அந்த ராஜ்யங்களின் முதல்மந்திரிகள் தெரிவுசெய்யப்பட்டனர். மத்திய பிரதேசத்தில் ரெவினியு மந்திரி சட்டசபை காங்கிரஸ் கட்சித் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். ஆந்திர பிரதேசத்தில் அகில இந்திய காங்கிரஸ் தலைவர் திரு. சஞ்சீவி ரெட்டி தெரிவுசெய்யப்பட்டார்.

# 'ராணுவதளங்கள் உலகெங்கும் இருப்பது அவசியமில்லை'

## மாக்மில்லன் கருத்து

வெஸ்டர், மார்ச் 8

பிரிட்டனின் தற்காப்புக் கொள்கையைப் பற்றி பிரதம மந்திரி மாக்மில்லன் கன்ஸர்வேடிவ் கட்சிக் கூட்டத்தில் பேசுகையில், உலகமெங்கிலும் பிரிட்டன் ராணுவ தளங்கள் வைத்திருக்க வேண்டும் என்ற நிலைமை மாறிவருகிறது என்று சொன்னர்.

போக்குவரத்து வசதிகள் அவ்வளவாக அபிவிருத்தி பெற்றிராத காலத்தில் உலகமெங்கிலும் நமக்கு ராணுவ தளங்கள் அவசியமாயிருந்தன.

இப்போது நிலைமை அப்படியில்லை துரிதமான போக்குவரத்து வசதிகள் இப்போது இருக்கின்றன. சென்றவருஷம் குவாய்த் நெருக்கடியின் போது பிரிட்டிஷ் துருப்புக்களை எவ்வளவு சீக்கிரமாக அங்கு அனுப்ப முடியும் என்பதைப் பிரத்யட்சமாகப் பார்த்தோம். இதன் காரணமாக, வெளி நாடுகளில் ராணுவத் தளங்களுக்காக நாம் செலவிடும் தொகை கணிசமாகக் குறையும். ஆனல் தற்காப்பு அமைப்பிலிருந்து போதிய அளவு நமக்கு விமோசனம் கிடைக்க வேண்டுமானல் சர்வதேசப் படை பலக்குறைப்பு ஒப்பந்தம் ஏபட்டால் தான் அது சாத்தியமாகும்.

நமது ராணுவ பலத்தினல் காப்பாற்றப் படுவது பிரிட்டன் அல்லது அமெரிக்கா மட்டும் அல்ல. நமது நேச நாடுகள் மட்டும் தான் என்பதுமில்லை. எந்தக்கோஷ்டியிலும் சேராத எல்லா நடுகளுக்குமே இது பாது காப்பாய் இருக்கிறது. நடு நிலைமை நாடுகளையும், இச் சகதி காப்பாற்றுகிறது என்று மாக்மில்லன் கூறினர்.

# திரு. நரசிம்மன் இலங்கை வருகிருர்

## உயர்தர ஐ. நா. அதிகாரியின் முதலாவது விஜயம்

கொழும்பு, வியாழன்

ஐ. நா. பிரதம உதவிப் பொதுக் காரியதரிசி திரு. ஸி ஆர். நரசிம்மன் இலங்கை வருகிருர் அவரது வருகை சம்பந்தமாக ஐ. நா. இலங்கைக்கு அறிவித்திருக்கிறது.

திரு நரசிம்மன் பிரதமர் ஸ்ரீமதி பண்டாரநாயகாவுடனும், பாதுகாப்பு, வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகளுடனும் பேச்சு நடத்தத் திட்டமிட்டுள்ளார்.

மிக உயர்ந்த ஒரு ஐ. நா. அதிகாரி, இலங்கைக்கு விஜயம் செய்வது இதுவே முதல் தடவையாகும. இம்மாதக் கடைசியில் வரவிருக்கும் திரு. நரசிம்மன் சில தினங்கள் இலங்கையில் தங்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய ராஜதந்திரியான திரு. நரசிம்மன் ஐ. நா. தற்காலிக பொதுக் காரியதரிசி திரு. யுதாண்டின் பிரதான ஆலோசகர்களில் ஒருவராகும். காலஞ் சென்ற திரு. ஹமர்ஷீல்டுக்குப் பதில் பொதுக் காரியதரிசி பதவிக்குத் தகுந்தவராக இவரது பெயரே அதிகமாகக் குறிப்பிடப்பட்டு வந்தது. பிரதமர், வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் ஆகியோருடன் சர்வதேச விஷயங்கள்பற்றியும், ஐ. நா. சம்பந்தப்பட்ட பிரச்சினைகள்பற்றியும் அவர் ஆலோசிப்பார் என விஷயமறிந்த வட்டாரங்கள் கூறின. காங்கோவுக்கு அதிக துருப்புக்கள் அனுப்புவதுபற்றியும் அவர் விவாதிக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## சடலங்கள் புதைக்கப்பட்டன

லண்டன், மார்ச் 8

கமரூன்ஸில்ஏற்பட்ட விமான விபத்தில் உயிரிழந்த 111 பேரின் சடலங்கள், விபத்து நடந்த இடத்துக்கருகில் நேற்று புதைக்கப்பட்டது 150 அடி நீளமான கிடங்கு ஒன்று புல்டோஸர்களின் உதவியைக் கொண்டு வெட்டிய பின் சடலங்கள் புதைக்கப்பட்டன.

## மேனன்-எதிர்ப்பு முன்னணி கலைப்பு

பம்பாய், மார்ச் 8

மேனன்-எதிர்ப்பு இளைஞர் முன்னணியைக் கலைப்பதென்று ஸ்ரீ ராமகிருஷ்ணபஜாஜ் தலைமையில் நடந்த முன்னணி அங்கத்தினர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இதையடுத்து முன்னணி கலைக்கப்பட்டது. வட பம்பாய் தொகுதிக்கு ஸ்ரீ மேனனை அபேட்சகராக நிறுத்தியதை ஆட்சேபித்து காங்கிரஸிலிருந்து ராஜினமாச் செய்தவர்கள் காங்கிரஸில் மீண்டும் சேருவதற்கு மனுப் போட வேண்டுமென்றும் யோசனை கூறப்பட்டதென்று முன்னணி வெளியிட்ட பத்திரிகைக் குறிப்பு கூறுகிறது.

### மணி வாக்கு

ஈசுவரனுக்கு நீங்கள் அளிக்கக் கூடிய உயர்ந்த சிறந்த மலர் உங்கள் உள்ளமே.

—பரமஹம்ஸர்.


# ஈழநாடு

EELA NADU

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு
மாசி மீ 26 உ (9-3-62)


## அரிசி உற்பத்தி

சென்ற 5 வருடங்களிலே இலங்கையில் அரிசி உற்பத்தி அதிகரித்துள்ளதாக விவசாய டைரக்டரின் அறிக்கை தெரிவிக்கின்றது. 1956-ம் வருடத்தில் 3 லட்சத்து 35 ஆயிரம் டன் அரிசி இங்கு உற்பத்தியானதாயும், இது 1960-ம் வருடத்தில் 5 லட்சத்து 12 ஆயிரம் டன்னுக்கு உயர்ந்துள்ளதாயும் சொல்லப்படுகின்றது. இந்தத் தகவல் உண்மையாயின், ஐந்து வருட காலத்தில் இங்கு அரிசி உற்பத்தி ஒரு லட்சத்து 77 ஆயிரம் டன் அதிகரிப்பது வரவேற்கத்தக்கதாகும்.

உற்பத்தி அதிகரித்திருந்தும், அரிசி இறக்குமதி இதே காலத்தில் குறைவதற்கு பதில் அதிகரித்திருக்கிறது. 1956-ம் ஆண்டில் 4 லட்சத்து 83 ஆயிரம் டன் அரிசி இறக்குமதியாகி இருக்க, 1960-ம் ஆண்டில் இதன் இறக்குமதி 5 லட்சத்து 20 ஆயிரம் டன்னுக்கு அதாவது 67 ஆயிரம் டன் உயர்ந்திருக்கிறதாம். இதற்கு ஜனத்தொகை அதிகரிப்பு முதலிய காரணங்கள் இலக்கலாம். மேற்குறித்த புள்ளிவிபரங்களின்படி பார்த்தால் இலங்கையின் அரிசித் தேவையில், சரிபாதிதான் இங்கு உற்பத்தியாகிறதென்றும், மற்ற பாதிக்குநாம்வெளிநாடுகளையே நம்பி, ஏராளமான செலாவணியை வெளியேற்றவேண்டியிருப்பதும் தெளிவாகும். இது திருப்தியான நிலைமை அன்று.

அரிசி உற்பத்தியை மேலும் பெருக்கவேண்டுமானல், அதிகமான நிலங்களில் சாகுபடி செய்வதுடன், உற்பத்தி விகிதத்தையும், அதிகரிக்கவேண்டுமென்கிறார் விவசாய டைரக்டர். நல்ல உரங்கள், நீர்ப்பாசன வசதிகள், நவீன சாகுபடி முறைகள் முதலியவற்றால், உற்பத்தியைப் பெருக்கலாமென்பது அவர் கூறும் யோசனை. உண்மைதான். ஆனால் எல்லாவற்றையும்விட, உணவு உற்பத்தியைப் பெருக்க உழைக்கும் கைகளே அதிகம் வேண்டும். சமீபத்தில் கிளிநொச்சியில் சாகுபடியான நெல்லை அறுவடைசெய்ய ஆட்கள் இல்லை என்றும் இதனால் விளைந்த நெல் வீணுவதாகவும் ஓர் அன்பர் தெரிவித்திருந்தார். காட்டைத்திருத்தி, வயலாக்கி நெல் சாகுபடியை அதிகம் செய்யவேண்டுமாயின் அதற்கு அதிகமான ஆட்கள் தேவை. நிலவளம், நீர்வளம், ஆள் பலம் எல்லாம் இலங்கையில் அமோகமாக இருக்கின்றன. லட்சக்கணக்கான உழைப்பாளிகளை, "நாடற்றவர்" என்று ஒதுக்கி அவர்களை வேற்றுமைப்படுத்தும் கொள்கையை துரதிருஷ்டவசமாக அரசாங்கம் கைகொண்டுவருகிறது அந்த வேற்றுமைக் கொள்கையை விட்டு, புத்தர் பெருமான் கூறிய மனிதாபிமானம் காட்டி அவர்களையும் உணவு உற்பத்தி வேலைக்கு சமமாகப் பயன்படுத்திக்கொண்டால், இலங்கையின் தேவைக்கான அரிசி அனைத்தையும் ஒரு சில வருடங்களில் இங்கேயே உற்பத்திசெய்யவு முடியும். இதற்கான மனமாற்றமும் தீர்க்கதரிசனமும் அரசாங்கத்துக்கு எவ்வளவு சீக்கிரத்தில் ஏற்படுகிறதோ அவ்வளவும் நாட்டுக்கு நல்லதாகும்.

இதே சமயத்தில் உத்தரவாத விலையை புசல் ஒன்றுக்கு ரூ. 12 ஆக இருப்பதை இப்போதைக்கு அரசாங்கம் குறைக்கப்படாது. நெல் சாகுபடி, அறுவடை இவற்றுக்கான செலவுகள் மிக அதிகரித்திருப்பதால், இந்த உத்தரவாத விலையை இன்னும் சில வருடங்களுக்காவது நீடிக்கவேண்டியது அவசியமாகும். அவசரப்பட்டு இதைக் குறைப்பதாயின், நெல் சாகுபடிக்காரர்களுக்கு நஷ்டமேற்படுவதுடன் இதனால் உற்பத்தியும் பெரிதும் குறைந்துவிடக்கூடும்.

# முத்துராமலிங்கத்தேவர்

## சுதந்திராக் கட்சியில் சேருவார்?

### மஸானி கூற்று

சென்னை, மார்ச் 8

சுதந்தராக் கட்சியின் சின்னமில்லாமல் வேறொரு சின்னத்தில் லோக சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மூவர் சுதந்தரக்கட்சிஅங்கத்தினராகவோ அல்லது இணை அங்கத்தினராகவோ சேர்வதாகத் தெரிவித்து உள்ளனர் என்று சுதந்தராக கட்சிப் பொதுக் காரியதரிசி ஸ்ரீ எம். ஆர். மஸானி இங்கு கூறினர். இவர்களும் கனதந்திர பரிஷத் அங்கத்தினர்களும் சேர்வதால் சுதந்தராக்கட்சியின் பலம் 25 ஆகும் என்று மஸானி கூறினர்.

ஸ்ரீ உ. முத்துராமலிங்கத் தேவர் (பார்வார்டு பிளாக்), சர்தார் பூதா சிங், சர்தார் தன சிங், குல்ஷான் ஆகிய மூவரும் சேரப்போகிறார்களென்று ஸ்ரீ மஸானி சொன்னர்.

காங்கிரஸ் அபேட்சகரின் கோரிக்கையின் பேரில், கோண்டாவில் மறு எண்ணிக்கை நடந்துகொண்டிருக்கிறதென்றும், அங்கிருந்து ஸ்ரீ தன்டேகர் தேர்ந்தெடுக்கப்பட்டு வருவாரென்று நம்புவதகவும், அவரோடு சேர்த்து 26 பேர் ஆகுமென்றும் ஸ்ரீ மஸானி சொன்னர்.

தேர்தல்களில்சுதந்தராக்கட்சியின் சாதனைகளைக் குறிப்பிட்டு "கம்யூனிஸ்ட் கட்சிகு இவ்வளவு வசதிகள் இருந்தும் கூடலோகசபையில் சுதந்தராக் கட்சியைவிட ஸ்தானங்களே அதிகமாகப் பெற்றிருக்கிறது. இதைக் கருதும்போது சுதந்தராக் கட்சியின் சாதனையைக் குறைத்து மதிப்பிடுவதற்கில்லை" என்றார்.

அவர் மேலும் கூறியதாவது:

வாக்குப் பதிவு நடப்பதற்கு சில தினங்களுக்குமுன், மங்களூரில் பேசுகையில் பிரதம மந்திரி நேரு, சுதந்தராக் கட்சிபிசுபிசுத்துப் போகுமென்றுசொன்னர். எங்கள் 'பிசுபிசுப்பைக் கண்டு அவர் அகமகிழ்வாரென்று நம்புகிறேன். நாடு முழுவதிலும், அசெம்பிளிகளில் வேறு எந்த எதிர்க் கட்சியையும்விட அதிகமான மெம்பர்களைக் கொண்டதாக வந்திருக்கிறது, அந்த பிசுபிசுத்த சுதந்தராக் கட்சி! ராஜஸ்தான், குஜராத், பீஹார், ஒரிஸ்ஸா ஆகிய 4 ராஜ்யங்களில் உத்யோக பூர்வமான எதிர்க்கட்சியாக அமைந்துள்ளது 'இப் பிசுபிசுத்த' சுதந்தராக் கட்சி. ஒரு ராஜ்யத்தில் வெகுஜனவாக்கில 22.97 சத விகிதமும், மற்ரென்றில் 17.44 சத விகிதமும், மூன்றுவதில் 17.2 சத விகிதமும், அதாவது ஆளும் கட்சிக்குக் கிடைத்துள்ள வோட்டுகள் சத விகிதாசாரத்தில் ஏறக்குறைய பாதி வாக்குகளைப் பெற்றுள்ளது சுதந்தரக் கட்சி. இது சற்று பிசுபிசுப்புத் தானல்லவா!

லோக சபைக்கும், ராஜ்ய சட்ட சபைகளுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட சுயேச்சைகள் சுதந்தராக் கட்சியில் சேர்ந்து, நாட்டுக்கு அவசியமான சக்தி வாய்ந்த எதிர்க் கட்சியை உருவாக்குவதில் உதவிபுரியவேண்டும்.

ஹிமாசலப் பிரதேசத்தில் சம்பா தொகுதியில் லோக சபைத் தேர்தலுக்கான பிரசாரம் துவக்குவதற்கு முன்னமே ஸ்ரீ மஸானி வாபஸ்பெற வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருப்பதாக அவரே அறிவித்தார்."

### "முன்னணி" நிறுவும் யோசனைக்கு ஆதரவு

பார்லிமெண்டில் ஆளும் கட்சிக்கும், கம்யூனிஸ்ட் கட்சிக்கும் எதிராக, பொது முன்னணியாக சேரும் வகையில், பல்வேறு ஜனநாயக எதிர்க் கட்சிகளிடையில் தொடர்புக் கமிட்டி அமைக்கவேண்டுமென்று ஸ்ரீ மஸானி கூறினர்.

காங்கிரஸ் கட்சியை எதிர்க்க அரசியல் சட்ட முன்னணியை நிறுவவேண்டுமென்ற ராஜாஜி யோசனையைக் குறிப்பிட்டு, இது மிகவும் நல்ல யோசனை; மற்றக் கட்சிகள் ஒத்துழைத்தால் சுதந்தராக் கட்சி மேற்கொண்டு முயற்சி எடுக்குமெனறு ஸ்ரீ மஸானி கூறினர்.

பார்லிமெண்டில் சுதந்தராக் கட்சி தன் சொந்தப் பெயரில் தான் செயலாற்றும். ஆயினும், பிரஜைகளின் ஜீவாதார உரிமைகள் சம்பந்தமான பிரச்னைகளில், ஆளும் கட்சிக்கும், கம்யூனிஸ்டுகளுக்கும் எதிராக நமது கட்சியுடையதும், மற்ற ஜனநாயக எதிர்க் கட்சிகளுடையதுமான கொள்கைகளை இணக்கமாக அமைத்துக் கொள்வதற்கான தொடர்புக் கமிட்டி ஒன்றை ஏன் நிறுவக் கூடாதென்று புரியவில்லை என்றார்.

சுதந்தராக் கட்சிக்கும், ஜனசங்கத்துக்கும் பொது பொருளாதார குறிக்கோள்கள் இருப்பதால் இரண்டும் நெருங்கி ஒத்துழைக்கலாமென்ற செய்தியைப்பற்றிக்கேட்டதற்கு, கம்யூனிஸ்டுகள் நீங்கலாக மற்றெல்லா எதிர்க் கட்சிகளுடனும் நாங்கள் ஒன்றுக செயல்படுவோம்.

சீன பிரச்னையில் பி. சோ. கருத்தை நாங்கள் ஒப்புக் கொள்கிறோம். நாங்கள் ஏன் பார்லிமெண்டில் ஒன்றுக பாடுபடக் கூடாது? என்று கேட்டார்.

பார்லிமெண்டில் ஸ்ரீ அசோக் மேத்தா, பேராசிரியர் ரங்கா, ஆசார்ய கிருபளானி போன்ற பெயர்பெற்ற பேச்சாளர்கள் இல்லாததை புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களிடையில் எழும் புதுத் திறமைசாலிகள் ஈடுபடுத்திவிடுவார்கள் என்றார்.

உங்களுக்குத்தான் தெரியும், அதே நபர்கள் விவாதத்தை நடத்துவதும் அதே கேள்விகள் கேட்பதும், அதே பதில்கள் கிடைப்பதும். நமக்கெல்தாம் அலுத்துவிட்டது. புது மெம்பர்கள வந்திருப்பதால், விவாதங்கள் சுவாரசியமாக இருக்கும் என்றார்.

## 40 ஆண்டுகளின் பின் ஓய்வு

உடுப்பிட்டி, வியாழன்

கரவெட்டியைச் சேர்ந்த திரு. எஸ். ஆறுமுகம் அச்சுவேலி கிறிஸ்தவக் கல்லூரி, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, கரவெட்டி விக்னேஸ்வராக்கல்லூரி ஆகியவற்றில் 40 ஆண்டுகள் ஆசிரியராகக் கடமையாற்றி ஓய்வு பெறுவதை கொண்டாடுமுகமாக நடத்தப்பட்ட பாராட்டுவிழா விக்னேஸ்வராக் கல்லூரியில் நடைபெற்றது.

பழைய மாணவர் சார்பில் திரு. எம். சிவசிதம்பரம் எம். பி. திரு. ஆறுமுகத்துக்குப் பாராட்டுத் தெரிவித்தார்.

விக்னேஸ்வரக் கல்லூரி அதிபர் திரு. கே. சிவப்பிரகாசம் விழாவுக்குத் தலைமை தாங்கினர்.

## மன்னர் மகேந்திராவுக்கு நேருயிஜி அழைப்பு

புதுடில்லி, மார்ச் 7

இந்தியா தனது நடுநிலைமைக் கொள்கையை தொடர்ந்து கடைப்பிடித்து வரும் என்றும் மன்னர் மகேந்திரா இந்தியாவுக்கு விஜயம் செய்ய வேண்டுமென்றும் பாரதப் பிரதமர் திரு. நேரு மன்னர் மகேந்திராவுக்கு அனுப்பியுள்ள கடிதமென்றில் தெரிவித்துள்ளார்.

நடைபெற்ற பொதுத்தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றதற்கு மகிழ்ச்சி தெரிவித்து நேபாளமன்னர் மகேந்திரா அனுப்பியுள்ள ஆசிச் செய்திக்கு நன்றி செரிவித்து அனுப்பியுள்ள கடிதத்திலேயே திரு. நேரு மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மன்னர் மகேந்திரா இந்தியாவுக்கு விஜயம் செய்வதால் இருநாடுகளிடையேயும் நட்புறவு பலப்பட இது வழிசெய்யுமெனவும் இதனல் இருநாடுகளுக்கும் அதிகநன்மையயே பெருகுவதாக இருக்குமெனவும் திரு. நேரு தமது பதிலில் குறிப்பிட்டுள்ளார்.

இம்பால், மார்ச் 8

யூனியன் பிரதேசமான மணிபுரியில் மூன்ருவது பொதுத் தேர்தலில் வாக்குப் பதிவு பூர்த்தியடைந்து விட்டது.

இரு லோகசபை ஸ்தானங்களுக்கும் அவற்றைச் சேர்ந்த 19 பிரதேச கவுன்சில்கள் தொகுதிகளுக்கும் வாக்குப் பதிவு நடந்தது. சராசரி 60 சத விகிதத்தினர் தங்களுடைய வாக்குகளைப் பதிவு செய்திருப்பதகச்சொல்லப்படுகிறது சில சாவடிகளில் 80 சத விகிதத்துக்கும் அதிகமான வாக்குகள் பதிவாகியுள்ளன.

# முத்திரை வாங்க 8 மைல் நடக்க வேண்டுமாம்

### தம்மன்கடுவையில் கஷ்டம்

அக்கரைப்பற்று, வியாழன்

தம்மன்கடுவ டி. ஆர். ஓ. பகுதியிலுள்ள முத்துகல் என்ற இடத்தில் வசிக்கும் மக்கள், முத்திரைகள் வாங்குவதற்கு எட்டு மைல் தூரம் நடக்க வேண்டியிருக்கிறது.

1960-ம் ஆண்டின் முற்பகுதியில், முத்துகல் என்ற இடத்தில் ஒரு உப தபாற் கந்தோரை நிறுவுவதற்கென சப்-போஸ்ட் மாஸ்டர் நியமனத்துக்கு தபால் இலாகா விண்ணப்பங்கள் கோரியிருந்தது. அதற்கான நேர்முகப் பரீட்சையும் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து அந்த நியமனத்துக்கான இரண்டாவது நேர்முகப் பரீட்சையும் 1961-ம் ஆண்டு ஜூன் மாதம் நடைபெற்றது. ஆனல் இதுவரை எவரும் நியமிக்கப்படவுமில்லை, உப தபாற் கந்தோர் நிறுவப்படவும் இல்லை.

முத்துகல்லில் ஒரு உப தபாற் கந்தோர் இல்லாததினல், அங்குள்ள மக்கள் முத்திரை வாங்கவோ அன்றி மற்றும் தேவைகளுக்கோ எட்டு மைல் தூரம் நடக்கவேண்டியிருக்கிறது.

## ஐயாறன் எழுதுவது

வடக்கே சாந்திநிகேதன் சென்று அங்கு சில வருடம் பரத நாட்டியம் பயின்று பட்டம் பெற்றுத் திரும்பிய, ஒரு சிங்களப் பெண்மணி, மீண்டும் அங்கு சென்று, நாட்டியக்கலை பயில விரும்புவதாகத் தெரிவிக்கிறார். பரத நாட்டியம் என்பது மிக அருமையான கலை என்றும், எவ்வளவு கற்றாலும் அதற்கு முடிவில்லை என்றும் சொல்லுகிறார். கலையின் ருசி கண்டவருக்குத்தானே அதன் மதிப்புத் தெரியும். ஆனல் அவர் மீண்டும் அங்கு சென்று பயில, நமது காருண்ய செலாவணி அதிகாரிகள் அனுமதிப்பார்களா என்பது மிகவும் சந்தேகமே.

* * *

சமீபத்தில் இந்தியா சென்று திரும்புகையில் சென்னையில் அடையாற்றிலே ஸ்ரீமதி ருக்மணிதேவியின் தலைமையில் நடைபெறும் கலாக்ஷேத்திரத்துக்கு இலங்கைப் பத்திரிகைக்காரர்களுடன்சென்றிருந்தேன்.

காலை 9-மணி. மனதை வசீகரிக்கும் இயற்கை சூழ் நிலையிலே பல பல 'கொட்டில்'கள். லக்ஷ்மிஸ்தோத்திரத்தைப் பல பெண்மணிகள் சேர்ந்து இனிமையாகப் பாடியது உள்ளத்தைத் தொட்டது. சில நிமிடங்களில் அப்பெண்மணிகள் வெளியே வந்தனர். அதில் ஒரு அமெரிக்க பெண்மணியுமிருந்தார்.

இலங்கையிலிருந்து நாங்கள் வந்துள்ளதை அறிந்ததும், அங்கு கலை பயிலும் சுமார் 10 இலங்கைப் பெண்மணிகள் வந்து மகிழ்ச்சியுடன் எங்களைக் கண்டனர். கலாக்ஷேத்திரத்தில் தங்களுக்கு அருமையான கலைப் பயிற்சி கிடைப்பதாயும், ஆனல் இலங்கை அரசாங்கம் திடீரென செலாவணி பர்மிட் கொடுக்க முடியாதென்று தடுத்து விட்டதால், தாங்கள் பூரண பயிற்சி பெற முடியாமல் இலங்கைக்குத் திரும்பவேண்டி இருக்குமோ என்று கவலைப்படுவதாகவும் தெரிவித்தனர்.

* * *

அதில் ஒரு சிங்களப் பெண்மணி. கொழும்பில் ஒரு நீதிபதியின் புதல்வி. நெற்றியில் குங்குமப் பொட்டுவைத்துக் கொண்டு நின்றதைக் கண்டதும், அசல் தமிழ்ப் பெண் மாதிரியே இருந்தது. என் சிங்கள சகாக்களும் வியப்படைந்தனர். அப் பெண்ணுக்கு பர்மிட் கிடைக்காததால், அவரைத் திரும்பிவரச் சொல்லவேண்டியிருக்கிறதாக, அவர் தந்தையார் வருத்தத்துடன் ஒரு கடிதம் எழுதியுள்ளாராம். இலங்கைப் பெண்மணிகள் பலர் அங்கு மிக உற்சாகத்துடனும் ஊக்கத்துடனும் இசை, நடனம் முதலிய கலைகளைப் பயிலுகின்றார்கள். அவர்களுக்குப் பர்மிட் கொடுக்க முடியாதென்று, பாதியில் மறுப்பது ஒருவித பாவமாகும்.

"இனி புதிதாக வருகிறவர்களையாவது வராமல் தடுக்கட்டும். ஏற்கெனவே வந்து கலை பயில்பவர்களாவது பயிற்சியைப் பூர்த்திசெய்ய இலங்கை அரசாங்கம் தயவுசெய்து அனுமதிக்கவேண்டும். நீங்கள் பத்திரிகையில் எழுதுங்கள்" என்று தலைவர் ருக்மணிதேவி மிக உருக்கமாகக் கூறினர். ஆனல்......!

* * *

ஸ்ரீமதி ருக்மணிதேவி இலங்கைக்கு சீக்கிரத்தில் வந்து, சில கலை நிகழ்ச்சி நடத்துவாரென்று அறிந்தேன். பிரதமர் ஸ்ரீமதி பண்டாரநாயக்கா இவ்வ நடனங்களைப் பார்ப்பதுடன், அடையார் கலாக்ஷேத்திரத்திலே பல கலைகளையும் கற்பிக்கும் முறையையும் நேரில் கண்டால், தமது புதல்விக

(5-ம் பக்கம் பார்க்க)

# "பீக்கு 10 ரூபா நோட்டு கட்டுகளை தந்தார்"

## ரூ. 2,40,000 திருடியதான வழக்கில் சாட்சியம்

கண்டி, வியாழன்

"கடந்த வருடம் பெப்ரவரி மாதம் முதல் திகதி தீமன் பெரேரா என்பவர் என்னிடம் வந்து, பெரியதொரு ரயில் கொள்ளை நடைபெறப் போகிறது என்று கூறினர். தீமன் பெரேராவை எனக்கு பத்து வருடங்களாகத் தெரியும்".

தபால் பைகளிலிருந்து ரூ. 240,000 திருடியதாகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, கண்டி மாஜிஸ்டிரேட் திரு. பீ. எஸ். டபிள்யு. அபயவர்த்தன முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சமயம், சி. ஐ. டி யைச் சேர்ந்த சார்ஜண்ட் எல். டபிள்யு. ஏ. எஸ். அப்புஹாமி மேற்கண்டவாறு கூறினர்.

கொழும்பு-கண்டி புகையிரதத்திலிருந்து கடந்த வருடம் மார்ச்மாதம் 3-ம் திகதி, மூன்று தபால் பைகளில் இருந்து ரூ. 240,000 களவாடியதாக புகையிரத தலைமைக் கார்ட் ஜி. எல். ஜோன் பெரேரா, கே. ஏ. பெரெஞ்சர், எச். டபிள்யு. பெர்ணண்டோ, எஸ். ஏ. ஜோன்சிங்கா, பி. ஜி. சமரவீரா, எச். டபிள்யு. பெரேரா ஆகியோர் மீது குற்றம் சாட்டி இவ் வழக்குப் பதிவாகியிருந்தது.

திரு. அப்புஹாமி மேலும் தெரிவித்ததாவது:

"புகையிரத கார்ட்மார்களுடன் சேர்ந்து பணத்தைக் கொள்ளையடிக்கபெர்ணண்டோ என்பவர் ஒழுங்கு செய்திருப்பதாக என்னிடம் பெரேரா சொன்னர்.

மார்ச் மாதம் 23-ம் திகதி, நான் சில பொலிஸ் அதிகாரிகளுடன் பண்டியமுல்ல கோவிலுக்குச் சென்றேன். அங்கு பிரதம குரு சரணங்கரா தேரோ எனக்கு ஒரு பிஸ்கட் டின் தந்தார். அதற்குள் 10 ரூபாய்களைக் கொண்ட 12 கட்டுகள் இருந்தன. அடுத்த நாள் அண்டாரவீவ என்பவரின் வீட்டுக்குச் சென்ற சமயம், அவர் எனக்கு ரூ. 1000 மும் ஒரு பெட்டிக்குவ சில நகைகளும் கொடுத்தார்".

மேல் விசாரணை மார்ச் மாதம் 27-ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

---

# புதுவருட தினத்தில் கருவாடு கிடைக்கும்

## வர்த்தக அமைச்சு ஏற்பாடு

கொழும்பு, வியாழன்

தமிழ் சிங்கள புதுவருடத் தினத்தின் போது, கருவாட்டுத் தட்டுப்பாடு இல்லாமல் செய்ய, இலங்கைக்கு கருவாடு ஏற்றுமதி செய்யும் நாடுகளுடன் புதிய உடன்படிக்கை செய்து இங்கு அதிகப்படியான கருவாடு இறக்குமதி செய்ய வர்த்தக உணவு, கப்பல் அமைச்சு எற்பாடுகள் செய்து வருகிறது. இதனல் புதுவருடத்தில் கருவாடு போதியளவு கைவசமிருக்கும் என நம்பப்படுகிறது.

இலங்கைக்கு கருவாடு ஏற்றுமதியை அதிகரிக்கும் முகமாக புதிய உடன்படிக்கை செய்துகொள்வதற்காக, விரைவில் அமைச்சின் வர்த்தக தூது கோஷ்டி செல்லுமென எதிர்பார்க்கப் படுகிறது.

இதுபற்றி அமைச்சின் அதிகாரியொருவர் தெரிவிக்கையில், கருவாட்டை சுலபமாகவும் விரைவாகவும் விநியோகம் செய்வதற்கு, இந்தநாடு பல பிரிவுகளாகப்பிரிக்கப்படுமென்றும், அந்தப் பகுதிகளுக்கு குறிக்கப்பட்ட அளவில் கருவாடு பங்கீடு செய்யப்படுமென்றும் கூறினர்.

பிரிக்கப்படும் பகுதிகள் வருமாறு: இரத்தினபுரி, கேகாலை, பதுளை, பிபிலை, அம்பாந்தோட்டை, கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, மாத்தளை, நுவரேலியா, மட்டக்களப்பு, கல்முனை, கல்லோயா, திருக்கோணமலை, குருநாகல், அநுராதபுரம், பொலன்நறுவ, மன்னர், சிலாபம், காலி, மாத்தறை, யாழ்ப்பாணம், சாவகச்சேரி, வவுனியா.

---

## பிரபல புரட்சியாளர் மரணம்

கல்கத்தா, மார்ச் 8

வங்கத்தின் பிரபலபுரட்சியாளரும் மேற்குவங்க முன்னுள் எம். எல். ஏ. யுமான ஸ்ரீ அம்பிகா சக்கரவத்தி காலமானர்.

ஸ்ரீ சக்கரவத்தி நீண்டகாலம் சிறைவாசம் அனுபவித்திருக்கிருர்.

---

## "மாணவர்கள் உபயோகமானதொழில் செய்தல் அவசியம்"

— எம். பி.

அம்பலாங்கொடை, வியாழன்

'நான் பர்மாவில் இருந்த சமயம், ஒரு நகரத்துக்கு விஜயம் செய்தேன், அந்த நகரத்தில் உள்ள மக்கள் பல தொழில்களையும் பயின்று வருகின்றனர். சிலர் தச்சுத்தொழிலில் பயிற்சி பெறுகின்றனர். மற்றும் சிலர் மேசன் தொழிலில் பயிற்சி பெறுகின்றனர். இப்படி அங்குள்ள மக்கள் பல தொழில்களிலும் பயுற்சி பெறுகின்றனர். இதற்கான செலவுகள் யாவற்றையும் அரசாங்கம் கொடுக்கிறது. இம்மாதிரி இலங்கையும் விளங்க வேண்டும். இலங்கையில் உள்ள மாணவர்கள் ஜி. ஸி. ஈ. பரீட்சையில் பௌதிகம் போன்ற பாடங்களில் சித்தியெய்திவிட்டு, வயர் பொருத்தும் வேலைகள் போன்ற சிறு தெரிழில்களைச்செய்கின்றனர்."

அம்பலாங்கொடை, வெலிகொடையில் நடைபெற்ற கூட்டமொன்றில் அம்பலாங்கொடை எம். பி. திரு. பீ. டி' எஸ். குலரத்தின பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

---

## 2 மாதமாக சம்பளம் பெறுத ஆசிரியர்

பண்டாரவளை. புதன்

பண்டாரவளை அர்ச். சூசையப்பர் பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியர் திரு. எம். பி. லங்காதிலகா என்பவருக்கு கடந்த இரண்டு மாதகாலமாக சம்பளம் எதுவும் கிடைக்கவில்லை. இது குறித்து அவர் பல தடவை கல்வி இலாகாவுக்கு முறையிட்டும் பலன் ஏதும் கிடைக்கவில்லை.

கடந்த மாதம் அவர் மூன்று நாள் லீவு எடுத்துக்கொண்டு கொழும்பிலுள்ள தலைமைக் காரியாலயத்தில் தனிப்பட்ட முறையில் முறையிட்டும், இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

---

## கர்ப்பம் கலங்கியது

பாங்காக், மார்ச் 8

தென் தாய்லாந்திலிருந்து வந்த கப்பல் அப்போதுதான் ரேவுத் துறையில் வந்து நின்றது நான்கு கர்ப்பஸ்திரிகள் ஏணிப் படிக்கட்டு வழியாக மளமள வென்று இறங்கலாயினர். "கர்ப்பிணிகள் இவ்வளவு வேகமாக நடக்க முடியுமா" என்று பொலிஸ்காரர்களுக்கு சந்தேகம் தட்டியது. உடனே அவர்களை நிறுத்திக் கைது செய்தனர். அவர்கள் "கர்ப்பதித்ல்" இருந்து 63 சீட்டுக் கட்டுப்பெட்டிகள், அமெரிக்க சிகரட்டுகள், மதுபானங்கள், அலங்காரப்பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

---

## வைத்தியசாலை மூடப்பட்து

சாவகச்சேரி, வியாழன்

சாவகச்சேரி கிராமச்சங்கக் கண்காணிப்பில் நடைபெற்று வரும் சரசாலை வைத்தியசாலை பலமாசகாலமா மூடப்பட்டிருப்பதாகவும், சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையைச் சேர்ந்த செல்வி, அமரசிங்கம் மூன்றுமுறை கடமையாற்றச் சென்று பார்த்தபோது பூட்டப்பட்டிருந்ததால் கடமையாற்ற முடியாது திரும்பியதாக கூறப்படுகிறது.

அப்பகுதியில் வாழும் மருத்துவப்பெண்ணும் லீவில் இருப்பதாக அறியப்படுகிறது.

## மனைவியை தீ வைத்து கொன்ற கணவன்

பெங்களூர், மார்ச் 8

மனைவிக்கு அவளுடைய கணவன் தீ வைத்து கொன்றதாக போலீஸார் கூறினர்.

தியாகராயப் பேட்டையில் திம்மம்மா என்பவள் சமையல் செய்து கொண்டிருந்ததாகவும் அப்பொது அவளுடைய கணவன் அவளுடைய ஆடைகள் மீது மண்ணெண்ணையை ஊற்றி பற்ற வைத்து விட்டதாகவும் கூறப்படுகிறது. திம்மம்மா ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டாள். ஆனல் அங்கு அவள் உயிர் பிரிந்துவிட்டது.

கணவன் மீது கொலை வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

---

## அடுத்த மாதம் காங்கிரஸ் அக்ராசனர் தெரிவு

புதுடில்லி, பெப். 8

ஸ்ரீ என். சஞ்சீவ ரெட்டிக்கு பதிலாக அடுத்த காங்கிரஸ அக்ராசனத்தை தேர்ந்தெடுக்க அடுத்த மாதம் அகில இந்திய காங்கிரஸ கமிட்டியின் கூட்டம் டில்லியில் கூட்டப்படலாம் என்றுதெரிய வருகிறது. ஆந்திரா முதன் மந்திரியாக இருப்பதை யொட்டி ஸ்ரீ சஞ்சீவி ரெட்டி இப்பதவியிலிருந்து விலகுவார்.

மத்திய பார்லிமென்டரி போர்டு இம்மாதம் நாளை இங்கு கூடுகிறது அப்போது ஸ்ரீ ரெட்டியின் வாரிசு பற்றி மேலிடம் முடிவு செய்யும்என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்த அக்ராசனர் தேர்ந்தெடுக்கப்படும் வரை ஸ்ரீ. ரொட்டி இன்னும்சில நாட்கள் அக்ராசனர் பதவியில் இருப்பார் என்று அ இ. கா. க. வட்டாரங்கள கூறுகின்றன.

அடுத்த காங்கிரஸ் அக்ராசனர் யார் என்பதை அ. இ. கா. க. வட்டாரங்கள் கூறுவிட்டாலும்சிலவட்டாரங்களில் ஸ்ரீதிம இந்திராகாந்தியின்பெயர்பிரஸ்தாபிக்கப்படுகிறது. ஸ்ரீமதிகாந்தி முன்பு அக்ராசனராக இருந்திருக்கிருர் என்பது நினைவுறுத்தப்படுகிறது.

காங்கிரஸ ஸ்தாபனத்தை விட்டுவெளியேறி, உத்தியோக பூர்வ காங்கிரஸ் அபேட்சகர்களை எதிர்த்துப்போட்டியிட்ட அதிருப்தி காங்கிரஸ்காரர்கள் மீண்டும் கட்சிக்குள் சேர்க்கப்படமாட்டார்கள் என்ற கட்சியின் நிலையை காங்கிரஸ் பொதுக் காரியதரிசி சதீக் அலி ஊர்ஜிதம் செய்தார்.

காங்கிரஸ் கட்சி மெஜாரிட்டி பெறத் தவறி விட்ட மத்தியப் பிரதேசத்திலும், ராஜஸ்தானிலும், சுயேச்சைகளாகத்தேர்தலில் நின்று வெற்றி பெற்ற சில அதிருப்தியாளர்கள் மீண்டும் சட்டசபை காங்கிரஸ் கட்சியில் சேர்க்கப்படுவார்களா என்று நிருபர்கள் கேட்ட போதே ஸ்ரீ சதீக் அலி மேற் கண்டவாறு கூறினர்.

---

# சோலைவரி விதிப்பதை 5 வருடம் ஒத்திவைக்கவேண்டும்

## மாநகரசபைக்கு வரும் பிரேரணை

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாண மாநகரசபையின் அடுத்த மாதாந்தக் கூட்டத்தில் பின்வரும் பிரேரணைகளைக்கொண்டுவர திரு. ஏ. நடராசா முன்னறிவித்தல் செய்துள்ளார்:

"சோலைவரி கூட்டப்பட்டுள்ளதால் பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இதனல் சபைமீது பொதுமக்கள் மிகுந்தஅதிருப்தி அடைந்துள்ளார்கள். ஆகவே கூடுதலாக வரி அறவிடும் விஷயத்தை ஒரு கணிசமான அளவு 5 வருட காலத்திற்கு ஒத்திவைக்க வேண்டும்".

"கச்சேரி, மாநகரசபை, கோடு, பெரியகடை முதலிய இடங்களுக்குச் செல்லவேண்டியிருக்கும பொதுமக்கள் பஸ்ஸுக்காக நீண்டநேரம்காத்து நிற்கவேண்டியுள்ளது. தொலை இடங்களிலிருந்து வரும் பஸ்கள் வரும்போது கூடுதலான பிரயாணிகளுடன் வருவதால் மாநகரசபை எல்லைக்குள் நிற்கும் மக்களுக்கு இடவசதி இல்லாமற் போய்விடுகிறது. எனவே கோப்பாயிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு மட்டுமென பிரத்தியேகமாக காலை ஏழு மணி முதல் மாலை ஏழு மணி வரை பருத்தித்துறை வீதி-கச்சேரி நல்லூர்வீதி வழியாக குறுகிய பஸ் சேவை ஒன்றை ஆரம்பிக்கும்படி இலங்கைப் போக்குவரத்துச் சபையை இச்சபை கேட்டுக் கொள்ளுகின்றது. இதனல் பாடசாலை மாணவர்களுக்கும் அநேக நன்மையுண்டு.

---

## குழந்தை விளையாட்டு நடத்திய கிழவர்கள்

### குளவி கொட்டியதால் ஓட்டம் பிடித்தனர்

டெனியாய, வியாழன்

நன்ருக மது அருந்திய இரு வயோதிபர்கள், குளவிகளால் தாக்குண்டு தெய்வாதீனமாக உயிர் தப்பினர்.

தெனிப்பிட்டியா கிராமத்தைச்சேர்ந்த இரு வயோதிபர்கள் நன்ருக மதுஅருந்தி விட்டு நாட்டுப் பாடல்களைப் பாடிக் கொண்டு உல்லாசமாக வந்து கொண்டிருந்தனர். களுகலஹென என்ற இடத்துக்குவந்த சமயம், ஒரு மரத்தில் பெரியதொரு குளவிக் கூட்டைக் கண்டனர்

தங்களையே மறந்த நிலையில் இருந்த அவர்கள் குளவிக் கூட்டைக் கலைக்க ஆசை கொண்டு கற்களால் கூட்டுக்கு எறிய ஆரம்பித்தனர். இதைக் கண்ட ஒரு வலிபன் 'பகடி வெற்றியாகிவிடும் ஓடி விடுங்கள்' என்று கத்தினன். ஆனல் வயோதிபர்கள் அதைக் காதில் போட்டுக்கொள்ளவில்லை. அச்சமயத்தில் ஒருவருக்கு குளவி குத்தவே, 'ஐயோ... என்னைக் குளவி கொட்டி விட்டது... பாம்பு கடித்தது போல் இருந்தது...! என்று கத்தினர். பின்னர் இருவரும் ஒரே ஓட்டமாக ஓடி மறைந்தனர்.

---

## குளவிக்கூட்டை குழந்தைகள் கலைத்தனர்

### வழியில்சென்றவருக்கு வந்தது ஆபத்து

மக்கோனு, வியாழன்

மரமென்றில் தொங்கிக் கொண்டிருந்த குளவிக் கூட்டொன்றைக் கண்ட சில குளந்தைகள், கற்களால் அந்தக் கூட்டுக்கு எறிந்தனர். குளவிகள் கலந்ததைக் கண்டதும் ஓடோடி மறைந்து விட்டனர். ஆனல் அச்சமையம், அறுபது வயதுள்ள ஒருவர், அந்தவீதியோரமாக சைக்கிளில் போய்க் கொண்டிருந்தார். ஆத்திரம் கொண்டகுளவிகள் அவரை ஆசைதீரக் கொட்டியது.

எல்பிட்டியா நாகஹ தென்ன தோட்டத்தைச் சேர்ந்த வட்டு கங்காணி என்ற அவர், ஆஸ்பத்திரியில் அனுமதித்த 10 மணித்தியாலத்தில் மரணமானர்.

---

## பசும் பாலைக்குடித்து நோயுற்றனர்

ஹொறனை, வியாழன்

பசும்பாலைக் குடித்த அறுவர் 'ஹைட்ரோ பொபியா' என்ற நோயினல் பீடிக்கப்பட்டு இப்பொழுது சிறிது சுகமடைந்து வருகின்றனர். சிறிது காலத்துக்கு முன்னர் விசர் நாய் ஒன்றினல் கடிக்கப்பட்ட ஒரு பசுவின் பாலைக் குடித்ததினல் தான் அவர்கள் சுகவீனமுற்ருர்கள் எனக் கூறப்படுகிறது.

பொட்டல்கொட, இறிலெவியா என்ற இடத்தைச் சேர்ந்த 16 வயதுள்ள மாணவரான டி. சிறிசேன என்பவர் அண்மையில் இந்த நோயினல் பீடிக்கப்பட்டு மரணமானர்.

---

## சென்னையில் சம்பள பென்ஷன் கணக்கு 1960-61ல் ரூ. 20 கோடி

சென்னை, மார்ச் 8

1960-61ம் வருஷத்தில் ராஜ்ய அரசாங்கத்தின் சம்பளம், பென்ஷன் பட்டுவாடாக்கள் மூலம் மொத்தம் ரூ. 20. 88 கோடி செலவுபிடித்திருக்கிறது கவர்னர். சபாநயகர். உதவி சபாநாயகர் எம். எல். ஏ க்கள் எம். எல்ஸிக்கள் முதலியோருக்குக் கொடுத்த சம்பளம் இதில் அடங்கவில்லை.

---

## தாய்லாந்து மன்னர் பாகிஸ்தான் வருகிறர்

கராச்சி, மார்ச் 8

தாய்லாந்து மன்னரும், அவருடைய மனைவியும் அடுத்த ஞாயிற்றுக்கிழமையன்று பாகிஸ்தானுக்கு வியஜம் செய்கிருர்கள். அங்கு 12 நாட்கள் தங்கியிருப்பார்கள்.

---

## ஜயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ளையும் அங்கு அனுப்பி வைப்பதுடன், செலாவணி தடையையும் தளர்த்த உத்தரவிடக் கூடும்.

லட்சக் கணக்கிலே 'பிறமாண'வில் பணம் வெளியேறுகையில், அருங் கலைகளைக் கற்கவிரும்பும் சில பெண்மணிகளுக்குத் தடை போடுவது சற்றும் சரியாகாது. மனித உரிமையைப் பறிக்கும் இந்த உத்தரவை அரசாங்கம் பல காரணங்களை முன்னிட்டும் கூடிய சீக்கிரத்தில் தளர்த்த வேண்டுமென்பேன். இந்த் தடை இலங்கையின் அருங்கலை வளர்ச்சிக்குப் போடும் தடையேயாகும்.

# "நாடகத் தமிழ் சிறப்புடன் வாழ வகைசெய்தல்வேண்டும்"

## 'சிங்ககிரிக் காவலன்' அரங்கேற்றத்தில் நீதியரசர் தம்பையா தலைமையுரை

யாழ்ப்பாணம், வியாழன்

"நான் சிறுவனாக இருந்த காலத்தில் இந்தியாவிலிருந்து நாடகக் கோஷ்டிகள் இங்குவந்து நாடகங்கள் நடாத்துவதைப் பார்த்திருக்கிறேன். அப்போதெல்லாம் மக்களிடம் நாடகத்திற்கு நல்ல ஆதரவும் ஆர்வமும் இருந்தது. இன்று அந்நிலை குன்றிக்குறுகிவிட்டது. இதற்குக் காரணம் சினிமாவேயாகும். சினிமாவிலிருந்து நாடகத்தைத் தப்புவித்து வளர்ச்சிபெறச் செய்வதற்கு இளைஞர்கள் முன்வந்து செயலாற்ற வேண்டும்".

இவ்வாறு நீதியரசர் டாக்டர் எச். டபிள்யூ. தம்பையா கியூ. ஸி. யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை மாலை நடைபெற்ற "சிங்ககிரிக்காவலன்" என்ற நாடகத்துக்குத் தலைமைவகித்துப் பேசும்போது குறிப்பிட்டார்.

திரு. சொக்கலிங்கத்தால் (சொக்கன்) எழுதப்பட்டு இலங்கை கலைக்கழகத்தின் முதற் பரிசை சென்றுண்டு பெற்றதான இந்த நாடகம் யாழ்ப்பாணம் தமிழ்ப் புத்தக வெளியீட்டுக் கழகத்தால் அன்று மேடையில் அரங்கேற்றப்பட்டது. கலாநிதி சு. வித்தியானந்தன் கலையரசு கே. சொர்ணலிங்கம், யாழ்ப்பாண மேயர் திரு. எம். ஜேக்கப் முதலான பல பெரியார்களும் அநேக ரசிகர்களும் அங்கு சமுகமளித்திருந்தனர்.

நீதியரசர் டாக்டர் தம்பையா தமது தலைமையுரையில் மேலும் பேசியதாவது:-

ஆரியரின் மொழியான சமஸ்கிருதமும் ரோமானிய மொழியான லத்தீனும் இன்று உயிரிழந்த மொழியாகிவிட்டன. ஆனல் நாலாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியதான தமிழ் இன்னும் தனிச்சிறப்புடன் கன்னித்தமிழாகவே வாழ்ந்து கொண்டிருக்கிறது. இதற்குக் காரணம் தமிழ்ச் சமுதாயம் தனது தாய்மொழி வளர்ச்சிக்காகக் காலத்துக்குக் காலம் புரிந்துவரும் ஆக்கப்பணிகளேயாகும்.

தமிழ்மொழி சங்ககாலத்தில் இயலிலும், நாயன்மார் காலத்தில் இசையிலும் சிறந்து விளங்கியது. இயல், இசை ஆகியவைபோல நாடகத் தமிழ் அன்று சிறப்பிடம் பெறககூடிய வாய்ப்பு ஏற்பட்டிருக்கவில்லை. அக்காலத்தில் நாடகத் தமிழ் சிறப்புறுவதற்கு இப்போதைய வசதிகள் இருக்கவில்லை. அக்கஷ்டமான வேலையை இன்றையசந்ததியினர் மேற்கொண்டு நாடகத் தமிழைச் சிறப்புடன் வளரச் செய்ய வகைசெய்தல் வேண்டும்.

பெண்கள் மேடையேறுத வரை நாடகக் கலை விருத்தியடையப்போவதில்லை. கௌரவம் போய்விடுமேயென்ற தப்பான மனோநிலையைப் பெற்றோர் கைவிட்டுக் கௌரவமான அத்துறையில் தம் பிள்ளைகள் ஈடுபட அனுமதிக்கவேண்டும்."

### ஈழத்தமிழ் படைப்புகள்

தமிழ்ப்புத்தக வெளியீட்டுக் கழகத்தின் செயலாளரான டாக்டர் செ. சிவஞானசுந்தரம் வரவேற்புரை நிகழ்த்துகையில் பேசியதாவது:

ஈழத்து தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகள் பல அச்சேருது மறைந்துகிடக்கின்றன திறமான சிருஷ்டிகளைத் தெரியுசெய்து புத்தக வடிவில் கொண்டுவருவதே எமது கழகத்தின் நோக்கமாகும். இந்த நாடகத்தில் நடிப்பதற்கு இலங்கையின பல பாகங்களிலிருந்தும் நடிகர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவருக்கும் எமது நன்றி.

## 'கட்டுப்பாடு, எளிய வாழ்க்கை வேண்டும்'

--ராதா கிஷ்ணன்

ராஜ்புரா, (பஞ்சாப்), மார்ச்7

"மக்களிடையே கட்டுப்பாடு உணர்ச்சி வேண்டும். அவர்கள் எளிய வாழ்க்கை நடத்தவேண்டியது அவசியம்" என்று உப-ராஷ்டிரபதி டாக்டர் ராதா கிருஷ்ணன் வற்புறுத்தினர்.

கஸ்தூரிபா கிராமவிருத்தி நிலையததைச் சேர்ந்த புதிய ஹாஸ்டல் கட்டிடத்தைத் திறந்து வைத்துப்பேசுகையிலேயே டாக்டர் ராதாகிஷ்ணன் இவ்வாறு குறிப்பிட்டார். இந்த நிலையம் சர்வோதய கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டது. இதை 2 வருடங்களுக்கு முன்பு ராஷ்டிரபதி டாக்டர் பிரஸாத் திறந்து வைத்தார். இந்த நிலையத்தில் ஆதாரக்கல்வி பயிற்சி அளிக்கப்படுகிறது.

பொதுமக்களின் பொருளாதரத்தை அபிவிருத்தி செய்வது தான் இந்த நிலையத்தின் நோக்கம் என்றும், தனவந்தர்களுக்கும்ஏழைகளுக்குமிடையே உள்ள ஏற்றத்தாழ்வு மிகவும்குறைக்கப்படவேண்டும் என்றும்டாக்டர் ராதகிஷ்ணன் கூறினர்.

## மாஜி ராஜாக்கள் தேர்தலில் எப்படி வெற்றிபெற்றனர்?

### ஜெய்ப்பூர் மகாராணி கேள்வி

ஜெய்ப்பூர், மார்ச் 8

"தம்முடைய சமஸ்தானங்களைத் திரும்பப் பெறுவதற்காக ராஜாக்கள் எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்துவிட்டதாக காங்கிரஸ் தலைவர்கள் சொல்லுகிருர்கள். மத்தியிலும், ராஜ்யங்களிலும் இவ்வளவு வருஷங்களாக காங்கிரஸின் ஜனநாயக ஆட்சி நடந்தபிறகும் கூட மாஜி ராஜாக்களுக்கு ஏன் இவ்வளவு பொதுஜன ஆதரவு இருக்கிறது. என்பதைப் பற்றி அவர்கள் யோசித்துப் பார்த்தார்களா?" என்று ஜெய்ப்பூர் மகாராணி வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் கேட்டிருக்கிருர்.

"காங்கிரஸ் தலைவர்களே ராஜாக்களைப் பாராட்டுகிருர்கள். அவர்களை காங்கிரஸ் அபேட்சகர்களாகவும் நிறுத்துகிருர்கள். குவாலியர் மகாராணி, பரோடா மகாராஜா இருவரும் காங்கிரஸ் அபேட்சகர்களாக நின்று வெற்றி பெற்ருர்கள். பிக்கானிர் மகாராஜா சுயேச்சை அபேட்சகராக நின்று ஜெயித்தார். இது எப்படி முடிந்தது? தனிப்பட்ட முறையில் அவர்களுக்குள்ள செல்வாக்கு தான் காரணம்" என்று ஜெயப்பூர் மகாரணி அவ்வறிக்கையில் கூறியுள்ளார்.

சென்ற 14 வருஷங்களாக காங்கிரஸ் ஆட்சியில் காணப்பட்ட ஊழல் நிர்வாகம் தான் மக்களின் அதிருப்திக்கு முக்கிய காரணமாகும் என்ருர்.

மக்கள் ஏழ்மையில் உழன்று கொண்டிருக்கும் போது மந்திரிகளும், அதிகாரிகளும் சகல போகங்களுடன் வாழ்க்கை நடத்துகிருர்கள். இது மக்கள் கண்களில் படாமல் போகுமா? என்று மகாராணி கேட்டிருக்கிருர்.

ஜெய்ப்பூர் மக்களின் நலன்களை சுதந்திராக் கட்சி எப்போதும் கண்ணும் கருத்துமாகக் கவனித்துக் கொண்டிருக்குமென்றும் மகாராணி கூறியிருக்கிருர்.

## கர்ப்பச் சிதைவு செய்த டாக்டர் மீண்டும் தண்டனை

லண்டன், மார்ச் 7

ஸ்ரீமதி பவன்ஜித் கௌர் என்ற இளம் பெண்ணுக்குக் கர்ப்பச் சிதைவு செய்வதற்காக டாக்டர் மெஹர் சிங்பன்ஸெல் என்ற சீக்கிய டாக்டர் ஆப்பரேஷன் செய்தார். அதற்குப் பிறகு அவள் இறந்தார்.

அவளுடைய உயிரைச் சிறிதும் மதிக்காமல் கர்ப்பத்தைச் கலைக்க அவர் ஆப்பரேஷன் செய்தார் என்று பிரிட்டிஷ் ஜெனரல் வைத்தியக் கவுன்சிலின் ஒழுங்கு நடவடிக்கை கமிட்டி இன்று முடிவு செய்தது. ரிஜிஸ்தரிலிருந்து அவருடைய பெயரை நீக்க கட்டளை இட்டது.

கென்யாவில் அந்த டாக்டருக்கு 3 வருடங்களுக்கு முன்பு அக்குற்றத்துக்காக 30 மாதம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.


நாளுக்கு நாள் கடின பாவனைக்கு நிகரற்று விளங்குவது.




கனபோ பொப்ளின்

ஆமாம், நாளாந்தம் கடினமாக உழைப்போர்க்கு உகந்த சிறந்த கடினமான, நன்கு பாவிக்க வல்ல புடவை இதுவே! கனபோ பொப்ளின்பாடசாலை யூனிபோம்களுக்கும் கந்தோர் ஷேர்ட்டுகளுக்கும் மிகச் சிறந்தது. வெள்ளையிலும், மென்மையான பல வண்ணங்களிலும் கிடைக்கும். சாயம் போகாது என்பதற்கு உத்தரவாதமுடையது.

ஏகவினியோகஸ்தர்கள்: ஸி. டப்ளியூ. ஈ.

கிடைக்குமிடம்: ஸி. டப்ளியூ. ஈ. இலாகா ஸ்டோர், கோட்டை, கொழும்பு. மக்கலம் ரோட் மெயின் வீதி, புறக்கோட்டை, மருதானை மற்றும் வெளியூர்கள்.

ஞாபகமிருக்கட்டும் ஸி. டப்ளியூ. ஈ. CWE தரத்திலும் ரகத்திலும் சிறந்ததைத் தருகிறது.

CWE/TX/119



புதுவருட விழாவையொட்டி

புத்தம் புதிய இறக்குமதிகள்!

'சற்றின் சில்க்'

சேலைகள்

பற்றிக் டிசைன்களில்
6 யார் சேலைகள்
ரூபா 32-50 சதம் மாத்திரமே

டயரும்ஸ்

மெயின் வீதி, யாழ்ப்பாணம்.

# நாட்டில் 60.000 வலிப்பு நோயாளர் இருக்கிறார்கள்

## மனநோயாளர் சங்கம் கணக்கெடுப்பு

கொழும்பு, வியாழன்
நாட்டின் பல பகுதிகளிலும் சுமார் 60,000 வலிப்பு நோயாளர்கள் இருப்பதாக இலங்கை மனநோயாளர் சங்கம் கணக்கெடுத்துள்ளது. இந்த நோயாளர்களைக் கண்டு பிடித்து, அவர்களைச் சுகப்படுத்த சங்கம் இப்பொழுது முடிவு செய்துள்ளது.

இதுபற்றி சுகாதார சங்கத்தின் அதிகாரியொருவர் தெரிவிக்கையில், இலங்கையிலுள்ள அநேக வலிப்பு நோயாளர்களை சுலபமாகக் குணப்படுத்தலாமென்றும், இந்த நோய் கண்ட ஒருவருக்கு மேலும் அதை வரவிடாமல் தடுக்க சுலபமான சில விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென்றும் கூறினர்.

---

## 7 மாணவர்களுக்கு 'ஸ்காலர்ஷிப்'

வேலணை, புதன்
கல்லூரி மாணவர்களின் கல்வி வசதிக்காக கல்விப் பகுதி அளிக்கும் 'ஸ்காலர்ஷிப்' பரீட்சையில் வேலணை வடக்கு ஆத்திசூடி வித்தியாசாலையில் இருந்து இம்முறை அதிகமான மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். மொத்தம் ஏழு மாணவரில் ஆறு மாணவர்கள் வேலணை மத்திய கல்லூரிக்கும் ஒருவர் வசாவிளான் மத்திய கல்லூரிக்கும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## ராணுவ வீரரை குத்திககொன்றதாக வழக்கு

பண்டாரவளை, புதன்
"மேஜர் எம். ஓ. குணரத்ன விடமிருந்து உத்தரவு எனக்குக் கிடைத்ததும், நான் லெப்டிணன்ட் கோப்ரல் எடிய குருவின் குடிசைக்குள் நுழைந்தேன். எடியகுருவின் கட்டிலின் கீழ் பல பொருட்களுடன் ஒரு சூட்கேஸ், றங்குபெட்டி, சிறியபெட்டி ஆகியவை இருந்தன. இந்த பொருட்களுடன் இரத்தக்கறை படிந்த ஒரு ஜோடி கால்சட்டையும் ஷேட்டும் அங்கிருந்தது. இவைகள் அனைத்தும் எடிகுருவுக்குச் சொந்தமானவை. உடுப்புகளில் றெஜிமெண்டல் அடையாளங்களும், 'ஆர்பிஈ' என்ற எடிகுருவின் முதலெழுத்துக்களும் காணப்பட்டன."

1960-ம் வருடம் ஜூன் மாதம் 27-ந் திகதி தியாத்தலாவையில் சிங்க றெஜிமெண்டைச் சேர்ந்த பி. எஸ். மைக்கல் சில்வா என்பவரைக் கத்தியால் குத்திக் கொலை செய்ததாக இலங்கை சிங்க றெஜிமெண்டைச் சேர்ந்த லெப்டிணன்ட் கோப்ரல் ஆர். பி. எடியகுரு என்பவர் மீது குற்றம் சாட்டப்பட்டுத் தொடரப்பட்ட வழக்கின் விசாரணையின்போது, சிங்க றெஜிமெண்டை சேர்ந்த கோப்ரல் குமாரசாமி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கோர்ட்டில் சில தஸ்தாவேஜுகளைச் சமர்ப்பிக்கும்படி நீதிபதி உத்தரவிட்டார்.

புரசிக்கூஷன் தரப்பில் முடிக்குரிய வழக்கறிஞர் திரு. ஜே. ஆர். எம். பெரேரா ஆஜரானர்.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

வெள்ளி, 9-3-62

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15காலைக் கதிர், 7-30 திரைஇசை, 7-45 கே. பாலசிங்கம் - பக்திப் பாடல்கள், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நாகஸ்வரம், 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வீணை.

இரவு 7-00 ஞானஞ்சலி, 7-30 நேயர்விருப்பம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 விமர்சனங்கள், 9-30 பாட்டு, 10-15 பக்திப்பாடல்கள்.

### திருச்சி

(செய்திகள் காலை7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்தியஇசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 சிந்தாமணி சகோதரர்கள்: கிருஷ்ணமூர்த்தி, பைரவசுந்தரம் - நாகஸ்வரம்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப்பள்ளிகளுக்கு, 1-00 மாதர்நிகழ்ச்சி, 1-30 வாத்தியஇசை, 1-50 குரல்இசை, 2-10 உயர்தரப்பள்ளிகளுக்கு.

மாலை 4-45 விவிதபாரதி(கர்நாடகசங்கீதம்), 5-45 காந்தி கதை, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 ஏ. நாராயணய்யர் - கோட்டு வாத்தியம், 9-15 பலகணி, 9-30 மெல்லிசை, 9-45 இசைமாலை.

## அச்சுவேலி கிராமசபையின் 12-ம் வட்டார இடைத் தேர்தல் 26ல் அபேட்சை நியமனம்

அச்சுவேலி, வியாழன்
அச்சுவேலி கிராமசபையின் 12-ம் வட்டார இடைத்தேர்தலுக்கான அபேட்சை நியமனப் பத்திரங்களை வடபகுதி உள்ளூராட்சி உதவி அதிபர் இம் மாதம் 26-ந் திகதி காலை இச்சபைக் காரியாலயத்தில் வைத்து ஏற்றுக்கொள்வாரென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வட்டார அங்கத்தவராக இருந்த ஆசிரியர் திரு. பொ. வேலும்மயிலும் அவர் கடமையாற்றும் ஆவரங்கால் மெதடிஸ்த மிஷன்பாடசாலை, அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டதைத் தொடர்ந்து அண்மையில், தமது பதவியை ராஜினமாச் செய்திருந்தது தெரிந்ததே!

---

## போட்டியின்றி தெரிவு

யாழ்ப்பாணம், வியாழன்
பண்டத்தரிப்பு கிராமசபையின் இரண்டாவது வட்டார இடைத் தேர்தலுக்கான பத்திரம் கோரப்பட்டபோது, மலாயன் பென்ஷனியர் திரு. நாகமணி செல்லத்தம்பி மட்டும் நியமனப்பத்திரம் தாக்கல்செய்தார். ஆகவே அவர் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## இனி மெத்தை ஆசனங்கள் இல்லை

ஹிண்டகல, புதன்
இங்கு பாடசாலைகளுக்கு விடப்படும் பஸ்களில் மெத்தை ஆசனங்களுக்குப் பதில் பலகையினல் செய்யப்பட்ட ஆசனங்கள் இனிமேல் பொருத்தப்படவிருக்கின்றன.

இது பற்றி இ. போ. ச அதிகாரியொருவர் தெரிவிக்கையில், பாடசாலை சேவைகளுக்கு விடப்படும் பஸ்களில் பிரயாணம் செய்பவர்கள் மெத்தை ஆசனங்களை வெட்டி, அதனுள் இருக்கும் றப்பரை வெளியில் எடுத்துவிடுகின்றனரென்றும், அண்மையில் புதிய பஸ் ஒன்று பாடசாலை மாணவர்களை ஏற்றிக்கொண்டு பாடசாலையை அடைந்த சமயம், ஒரு மெத்தை ஆசனத்திலுள்ள றப்பர் முற்றாக வெளியில் எடுக்கப்பட்டிருந்ததென்றும், இந்த றப்பர், அழி இறேசர்களாகப் பயன்படுத்தப்படுகிறதென்றும் கூறினர்.

சிலர் அந்த றப்பரைக் கள்ளத்தனமாக வீடுகளுக்கு எடுத்துச் சென்று மெத்தைகள் அமைக்கப் பயன்படுத்துகின்றனரென்றும் அவர் மேலும் கூறினர்.

---

## வேலணையில் தேசிய சேவை

வேலணை, புதன்
வேலணை அரசினர் மத்திய கல்லூரியில் தேசியசேவை முதன்முதலாக மணவர்களாலும் ஆசிரியர்களாலும் செய்யப்பட்டது.

கதிரைகளைத் திருத்துதல், இலக்கமிடுதல், கல்லூரி வளவு துப்பரவாக்குதல் போன்ற வேலைகள் செய்யப்பட்டன.


கெட்டியான

உணவு

அருந்துவதற்கு

உங்கள் குழந்தையை

சிறந்த முறையில்

பழக்கிவிட்டீர்களா?



அப்படியாயின் நீங்கள் ஞாபகத்தில் வைத்திருக்கவேண்டியவை இவையே

★ ஐந்து மாதங்களுக்குப்பின் தாமதிக்காது கெட்டியான உணவை சேர்த்துக் கொடுக்க வேண்டும்.

★ உணவைமாற்றும் பொழுது படிப்படியாக மாற்ற வேண்டும்.

★ நன்ருகச் செரிக்கக்கூடிய, கெட்டியான உணவை முதலில் தேர்ந்தெடுக்க வேண்டும்.

மூன்றிலிருந்து நான்கு மாதங்கள்தான் அநேகமாக கெட்டியான உணவு சேர்த்துக் கொள்ளவேண்டிய காலம். 50வருடங்களுக்கு மேலாக பார்லீஸ் தான் பாலுடன் சேர்த்து ஊட்டக் கூடிய கெட்டியான உணவும் இலகுவில் செரிக்கக் கூடியதும் என தாய்மார்கள் உணர்ந்து வந்துள்ளார்கள்.

பார்லீஸ் தானியப்பொருள்கள், கனிப் பொருள்கள் விட்டமின் சத்து இவை சமமாக உடைய உணவு. இந்த உணவு மிகவும் இலகுவாக செரித்துவிடும்.

பார்லீஸ் தயாரிப்பதற்கு மிகவும் இலகுவானது. சூடான பாலுடன் கலக்கவேண்டியது. அவ்வளவுதான்.

பார்லீஸ்
குழந்தைகளின்
முதல் கெட்டியான உணவு

## மரண அறிவித்தல்

கூட்டுறவு மொத்த ஸ்தாபனத்தின் அதிபரும், யாழ்ப்பாணம் ஐக்கிய வங்கித் தலைவரும், யாழ்ப்பாணம் கூட்டுறவுப் பள்ளிக்கூடத்தின் அதிபரும், வள்ளியம்மையின் கணவரும், திலகவதி, அம்பலவாணர், சேனாதிராசா, ஞானசம்பந்தன் ஆகியோரின் தகப்பனாரும், வவுனியா உதவி டாக்டர் (D.M.A) Dr. வே. யோகநாதனின் மாமனாரும் ஆகிய அ. அருளம்பலம் J. P. பிறக்டர் காலமாகிவிட்டார். அன்னாரின் பூதவுடல் இன்றுகாலை 10 மணியளவில் கோம்பையன் மணல் மயானத்தில் தகனம்செய்யப்படும். 38, கல்லூரிவீதி, நீராவியடி.

### அறிவித்தல்

யாழ்ப்பாணத்துப் பிரபலதவில் வித்துவான் தட்சணாமூர்த்தி தற்சமயம் யாழ்ப்பாணம் அளவெட்டியிலிருந்து சொந்த இடமாகிய இணுவிலுக்கு மாறி வந்திருக்கின்றார். அவருடைய சேவை வேண்டுபவர்கள் கீழ்க் கண்ட விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். நாதஸ்வரம், வி. உருத்திராபதி, இணுவில்.

## பொல்லாத பாசம்!

பர்மிங்ஹாம், மார்ச் 8

புகையில் மூச்சுத் திணறி, தமது 14 வயது மகன் இறந்ததைக் கண்டு அதிர்ச்சியுற்ற 53 வயதுள்ள ஒரு சீக்கியர் இங்கு இறந்தார்.

மேற் கூறிய சீக்கியர் வசித்துவந்த ஒரு ஜாகையில் தீப் பற்றிக் கொண்டது. அவருடைய 14 வயது மகன் சிவதேவ் தூங்கிக் கொண்டிருந்தான். தந்தை அவனை எழுப்புவதற்கு முயன்றார். ஆனால் சிறுவனே புகையில் மூச்சுத்திணறி இறந்துவிட்டான். இதைக்கண்ணுற்ற தந்தை மூர்ச்சையாகிவிட்டார். பையனும், தந்தையும் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். பையன் ஏற்கெனவேயே இறந்துவிட்டான். தந்தையோ ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட சிறிது நேரத்தில் இறந்தார்.

## ஹோட்டல் இடிந்து 40 பேர் மரணம்

கெய்ரோ, மார்ச் 8

வடக்கு எகிப்தில் உள்ள அஸீவூட்டில் ஒரு ஹோட்டல் இடிந்து விழுந்ததால் 40 பேர் கொல்லப்பட்டனர் என்று மத்தியகிழக்கு செய்தி ஸ்தாபனம் நேற்று அறிவித்தது.

இதுவரையில் 30 பிணங்கள் அகப்பட்டிருக்கின்றன.

ஹோட்டல் சொந்தக்காரர் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்.


2-வது வாரம்!

பிளாஸா (வெள்ளவத்தை) கெபிட்டல் (கொழும்பு) வெம்பிளி (கண்டி)

விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீகிருஷ்ணா (திருகோணமலை) சஹாரா (சிலாபம்) மொடர்ன் (பதுளை)

மனோகர், வீரப்பா, ஈ. வி. சரோஜா, ராஜசுலோசனா

நடித்த




8-வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (அம்பாறை)

சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், சாவித்திரி,

நடித்த

பாச மலர்

மனோகரா (யாழ்ப்பாணம்)

ஜெமினி கணேசன் சாவித்திரி

நடித்த

மகேஸ்வரி

பிற்பகல் 4 மணிக்கு மட்டும்

Two Way Stretch

(English)


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு மார்ச் மாதம் 9-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## 'தி. மு. க. வெற்றி இந்தித் திணிப்பால் ஏற்பட்டது'

### ஏழாலையில் உடுப்பிட்டி எம். பி.

உடுப்பிட்டி, வியாழன்

"இந்தியப் பெதுத்தேர்தலில் தி. மு. க. வின் எதிர்பாராத வெற்றிக்குக் காரணம் நேரு அரசாங்கத்தின் இந்தித் திணிப்புக் கொள்கையேயாகும்" என உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் ஏழாலை வடக்கு கலாநிதி சனசமூக நிலைய இரண்டாவது ஆண்டு விழாவிற் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. மு. சண்முகராசவின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திரு. சிவசிதம்பரம் தொடர்ந்து குறிப்பிட்டதாவது:-

" இன்று ஏராளமான பட்டதாரிகளும், பயிற்றப்பட்ட ஆசியரும் வேலையற்றிருப்பது, தமிழரைப்பொறுத்த மட்டில் அரசாங்கத்தின் மாற்றாந்தாய் மனப்பான்மையைக் குத்திக்காட்டுகிறது. இந் நிலையில் இளைஞர் உத்தியோகப்பற்றை உதறித் தள்ளி விட்டு விவசாயத்திலும் குடிசைக்கைத்தொழில்களிலும் ஈடுபடவேண்டுமென வலியுறுத்துகிறேன். உலகப்படத்தில் சில ஆண்களுக்கு முன் இடம் பெற்ற இஸ்ரேலும், கியூபாவும் பொருளாதாரத்துறையில் ஈட்டிய சாதனைகளை முன்வைத்து தமிழரும் செயலில் இறங்க வேண்டியது மிக மிக அவசியம் தமிழ்ப் பிரதேசங்களில் நிலமுண்டு. வாகன தோள்கள் உண்டு. நீர் வளமுண்டு, மனம் மட்டும் இருந்தால் மண்டிக்கிடக்கவேண்டிய அவசியமில்லை."

காரியதரிசி திரு. ஆ. தவப்பிரகாசம், நிலையம் இரண்டு இரண்டு ஆண்டுகளில் அடைந்த முன்னேற்றம் பற்றிய அறிக்கையொன்று சமர்ப்பித்தார்.

இறுதியில் குரும்பசிட்டி சனசமூக நிலையத்தார் அளித்த "பொலிடோல் பொன்னையா" என்னும் நகைச்சுவை நடகத்துடன் விழா முடிவடைத்தது.

## தாய்லாந்துக்கு யு. எஸ். உறுதிமொழி

### ஆக்கிரமிப்பை எதிர்க்க உதவி

வாஷிங்டன், மார்ச் 8

தாய்லாந்து கம்யூனிஸ்ட் ஆக்கிரமிப்புக்கு உள்ளானால், 'ஸீட்டோ' ஒப்பந்தப்படி தனக்கு உள்ள பொறுப்புக்களை யு. எஸ். நிறைவேற்றிவைக்கும். இவ்வாறு யு.எஸ்.அரசாங்கம் தாய்லாந்து அரசாங்கத்துக்கு உறுதிகூறியிருப்பதாக இங்கு வெளியிடப்பட்ட யு. எஸ். தாய்லாந்து கூட்டு அறிக்கை கூறுகிறது.

தாய்லாந்து அயல்நாட்டு விவகாரமந்திரி திரு. தானட் கோமானுக்கும் யு. எஸ். தலைவர்களுக்குமிடையே 4 நாள் பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற பிறகே, இந்த அறிக்கை விடப்பட்டிருக்கிறது.

கூட்டு அறிக்கையில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:-

"ஸீட்டோ ஒப்பந்தத்தின் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு ஒப்பந்தநாடுகளின் சம்மதத்தை முன்னதாகப் பெற வேண்டிய அவசியம் இல்லை. மற்றும் லாவோஸ் நிலைமையைப் பற்றியும் விரிவாகப் பரிசீலனைசெய்யப்பட்டது. நடுநிலைமை வகிக்கும் ஒரு சுதந்திர அரசாங்கத்தை லாவோஸில் நிறுவவேண்டியது அவசியம் என்று ஒப்புக்கொள்ளப் பட்டது. தாய்லாந்துமீது நேரடியான கம்யூனிஸ்ட் ஆக்கிரமிப்பைத் தவிர்ப்பதற்கு ஸீட்டோ மூலமாக அமெரிக்காவுக்கும் தாய்லாந்துக்குமிடையே நெருங்கிய உறவு இருக்கவேண்டியது அவசியம் என்று உணரப் பட்டுள்ளது.

## மாயமாகமறைந்த அபேட்சகர் திடீரென்று தோன்றினர்

புதுடில்லி, மார்ச். 8

லூதியானா தொகுதியில் இருந்து பஞ்சாப் அசெம்பிளிக்குத் தேர்தலில் போட்டியிட்டதும் திடீரென்று மாயமாக மறைந்த திரு. பஞ்சன்சிங் ஒருமாதகாலமாகப் பயங்கரமான அனுபவங்களுக்குப் பிறகு திரும்பிவிட்டார். இப்போது அவர் லூதியானாவுக்குச் சென்றுகொண்டிருக்கிறார்.

திரு. பஞ்சன் சிங் பெப்ரவரி மாதம் 6ந் தேதியன்று திடீரென்று மறைந்தார். அவருடைய மறைவு காரணமாகப் பலவிதமான ஹேஷ்யங்கள் ஏற்பட்டன. அவர் நேற்று திடீரென்று டில்லியில் தோன்றி தம்மைப்பற்றி ஏற்பட்ட புதிரைத் தாமே தீர்த்துவிட்டார்.

திரு. பஞ்சன் சிங் காணமற்போன தினத்தில் அவர் ரயிலில் ஏறியதைச் சிலர் கண்டதாகக் கூறப்பட்டது. இந்த விவரத்தை திரு. பஞ்சன் சிங் ஊர்ஜிதம் செய்தார்.

### பயங்கர அனுபவம்

திரு. பஞ்சன் சிங் தமக்குஏற்பட்ட அனுபவங்களைப் பற்றிப் பின்வருமாறு கூறினர். "நான் புதுடில்லிக்கு ரயிலில் சென்றேன். டில்லிக்குச் சென்றபிறகு எனக்குப் பயங்கர அனுபவங்கள் ஏற்பட்டன. எனக்குத் தெரியாத 2 பேர் என்னை ரயில்வே ஷ்டேசனில் சந்தித்தனர். அவர்கள் எனது ஒருசகா அபேட்சகரால் அனுப்பப்பட்டதாகக் கூறினர். எனது. சகா அபேட்சகரைப் போலவே நானும் அதே தினதித்ல் பெரோஸ் பூர்ஜிர்காத் தொகுதிக்குச் செல்வதாகவிருந்தேன். நான் ஒரு ஜீப்பில் அழைத்துச் செல்லப்படடேன். அந்த ஜீப் திரையிடப்பட்டிருந்ததால்அது எங்கு சென்றுகொண்டிருந்தது என்று என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. அப்போது கூட எனக்குச் சந்தேகம் ஏற்படவில்லை 2 மணிநேரம் பிரயாணம செய்தபின்னர் நான் ஒரு இடத்துக்கு வந்துசேர்ந்தேன். அங்கு எனக்குச் சாப்பாடு போடப்பட்டது. சாப்பிட்ட சிறிது நேரத்தில் நான் பிரக்ஞை இழந்தேன். ஞாபகம் வந்ததும் நான் ஒரு அறையில் படுக்க வைககப்பட்டிருப்பதாக அறிந்தேன். அப்போது கூட எனக்குச் சுயஉணர்வு பூரணமாக ஏற்படவில்லை. உடல் நிலையும் மோசமாய்த்தான் இருந்தது.

### விடுதலை

ஒருவாரம் ஒரு தனியறையில் அடைபட்டுக்கிடந்தபிறகு விடுதலை செய்யப்பட்டேன். லூதியானாவுக்குச் செல்லக் கூடாது என்று என்னை எச்சரிக்கை செய்தனர். பிலிபிட் என்னுமிடத்தில் எனது சகோதரருடன் தங்கப் போவதாக நான் கூறினேன். எனது சகோதரரின் வீட்டில் தங்கியிருந்தபோதுகூட நான் பூரணமாகக் குணமடையவில்லை.

தாம் கடத்திவரப்பட்ட சம்பவத்தை தமது சகோதரரிடம் கூடத் தெரிவிக்கவில்லை என்றார். தேர்தல் பிரசார ஏற்பாடுகள் குலைந்துவிட்டிருக்குமாதலால், மீண்டும் போய்த் தேர்தல் ஏற்பாடுகளில் கலந்து கொள்வதில்பிரயோஜனமில்லை என்று அவருக்குத் தோன்றியதாம்.

3அல்லது 4 தினங்கள் கழித்து சகோதரரின் பண்ணையிலிருந்து புறப்பட்டு, நண்பர்கள் பத்திரிகைகள் எட்ட முடியாத இடமாகப் பார்த்துக் கிராமப் புறங்களில் அலைந்து கொண்டிருந்தாராம். சென்ற திங்களன்று ராம்பூருக்கு வந்து அங்கிருந்து டில்லிக்கு வந்து சேர்ந்ததாகச் சொன்னர்.

## இந்தோனேஷிய கைதிகளை ஹாலந்து விடுவிக்கும்

ஹாலண்டியா(நியூகினி)மார்ச் 8

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினருடன் பேசியபிறகு இந்தோனேஷிய கைதிகளை விடுதலைசெய்ய டச்சு நியூகினி அதிகாரிகள் சம்மதித்தார்கள் ஜனவரி 15-ம் திகதி டச்சு இந்தோனேஷிய கடற்படைகளுக்கு இடையே நடந்த மோதலில் அவர்கள் பிடிபட்டார்கள்.

உடன்பாட்டின்படி மார்ச் 10-ம் திகதி சிங்கப்பூர் வழியாக யாகர்த்தாவுக்கு அக்கைதிகள் செல்வார்கள்.

## சம தர்ம சமுதாயத்தை அமைப்பதே இலட்சியம்

### —சென்னை முதன்மந்திரி

சென்னை சட்டசபை காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் தெரிவுசெய்யப்பட்டதும், அக்கூட்டத்தில் திரு. கே. காமராஜ் கூறியதாவது:-

மக்களுக்குப் பணிசெய்ய நீங்கள் உங்களை மீண்டும் அர்ப்பணம் செய்யவேண்டும். சமதர்ம சமுதாயத்தை ஏற்படுத்துவதே காங்கிரஸ் அரசாங்கத்தின் இலட்சியம். இவ்விஷயமாக மககளின் பூரண ஆதரவும் காங்கிரஸுக்கு இருக்கிறதென்றே நம்புகிறேன. எவ்வித முன்னேற்றமான மாறுதலையும் எதிர்க்க பிற்போக்கு சக்திகள் இருப்பது உண்மையே. ஆனால் சமதர்ம சமுதாயத்தை அமைப்பதில் பொதுமக்கள் காங்கிரஸுக்கு ஆதரவாக நிற்கிறார்கள். சிலர் எதிர்த்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் அரசாங்கம் இவ்விஷயமாக முன்னேறிச்செல்லும்.

ஏழைகள், படிக்காதவர்கள் இவர்களது நிலைமையை அபிவிருத்திசெய்யாவிடில் சமூகம் முன்னேறமுடியாது. மக்களின் நலனுக்காக காங்கிரஸ் ஓயாது பாடுபடுமென்று உறுதி கூறுகிறேன். காங்கிரஸ் செய்துள்ள நல்லகாரியங்களை மெம்பர்கள் மக்களுக்கு எடுத்து விளககவேண்டும். நாட்டின் சுபீட்சத்துக்கான திட்டங்கள் அமுல்செய்யப்படுவதையும் விளக்கவேண்டும். பொதுமக்களின் அதிகமான ஒத்துழைப்புக் கிடைத்தால் காங்கிரஸ் அதிகசேவை செய்யமுடியும். மக்களின் நன்மைக்காகவே நான் இடைவிடாது உழைப்பேனென்று உறுதி கூறுகிறேன்.

## ரயில்வே கடவைக்கு விரைவில் லைட்

மாவிட்டபுரம், வியாழன்

மயிலிட்டிக் கிராமச் சபை எடுத்துக்கொண்டநடவடிக்கை காரணமாக மாவிட்டபுரம் ரயில்வே கடவைக்கு விரைவில் லைட் பொருத்தப்படுமெனத் தெரிகிறது.

மயிலிட்டி கிராமச் சங்கம் சென்ற வருடம் மார்ச் மாதம் மாவிட்டபுரம் ரயில்வேகடவையில் ரயில்வே கேட்டுகள் பொருத்தப்பட வேண்டுமென அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்வதெனத் தீர்மானித்திருந்தது.

இதைத் தொடர்ந்து மயிலிட்டி கிராமச் சங்கத்தின் தலைவர் திரு. எஸ். சி. ஸ்ரீபாஸ்கரன் ரயில்வே ஜெனரல மனேஜருடன் பேச்சுவார்த்தைகள் நடத்தியதன்பேரில் இந்த இடத்தில் பாவிப்பதற்காக விளக்குகளும் எச்சரிக்கை செய்யக் கூடிய மணிகளும் உதவுவதாக வாக்குறுதியளிக்கப் பட்டது. இதற்குச் செலவாகும் 19,230 ரூபாயில் 5சதவீதத்தை மயிலிட்டி கிராமசபையினர் ஏற்றுக்கொள்வதென ஒப்புக்கொள்ளப்பட்டது. இந்தஇடத்தில் லைட்டுகள் பொருத்துவதற்கான வேலைகள் விரைவில் நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.